



16




# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT



# 2011

ශ්‍රී ලංකා අග්නිදිග විශ්ව විද්‍යාලය

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# பதினாறாவது வருடாந்த அறிக்கை

# 2011

உள்ளடக்கம்


| தொ.இல. | தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| ➢ | உயர்கல்வி அமைச்சு - நோக்கு, இலக்கு | i |
| ➢ | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - நோக்கு, இலக்கு | iii |
| ➢ | இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக – நோக்கு, இலக்கு | iv |
| 01. | உபவேந்தரின் மதிப்புரை | 01 |
| 02. | மாணவர் மற்றும் ஆளணிவள விபரங்கள் | 14 |
| 03. | உள்நாட்டு மாணவர் விபரம் | 15 |
| 04. | வெளிநாட்டு மாணவர் விபரம் | 15 |
| 05. | கல்விசார் ஆளணி விபரம் | 16 |
| 06. | 2011ம் ஆண்டு வேலையில் ஈடுபடுகின்ற பட்டதாரிகள் விபரம் | 17 |
| 07. | கல்விசாரா ஆளணி விபரம | 18 |
| 08. | ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரம் | 20 |
| 09. | நிகழ்ச்சிகள், செயலமர்வுகள் மற்றும் வேலைப்பட்டறை விபரங்கள் | 27 |
| 10. | பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகளின் விபரம் | 27 |
| 11. | ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் தொடர்பான விபரம் | 27 |
| 12. | மீண்டெழும் செலவினம் தொடர்பான விபரம் | 27 |
| 13. | மூலதனச் செலவினம் தொடர்பான விபரம் | 28 |
| 14. | செயற்றிட்டங்களின் விபரம் (உள்நாட்டு நிதியிடலில்) | 28 |
| 15. | செயற்றிட்டங்களுக்கான செலவீடுகளின் விபரம் (உள்நாட்டு நிதியிடலில்) | 29 |
| 16. | நிதி முன்னேற்ற விபரம் (செலவீடு) | 29 |
| 17. | நிதி முன்னேற்ற விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்) | 30 |
| 18. | நிதி செயற்பாட்டு ஆய்வு – **2011** | 30 |
| 19. | கிடைக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம் | 30 |
| 20. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 31 |
| 21. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில் | 41 |

## முகவுரை

இது இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 ஆம் ஆண்டுக்குரியதும் 16 ஆவதுமான ஆண்டறிக்கையாகும். இது நிதிக் கூற்றுக்களையும் உள்ளடக்கியுள்ளது. மீளாய்விலுள்ள ஆண்டின்போது இடம்பெற்ற அனைத்து நடவடிக்கைகளையும் வெளிப்படுத்துவதாக அமையும் வண்ணம் மூன்று மொழிகளிலும் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கை 1978 ம் ஆண்டின் 16ம் இலக்கமுடையதும் அதன் பின்னர் திருத்தப்பட்ட 1985ம் ஆண்டின் 7ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரகாரமும் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துடனும் சிபார்சுகளுடனும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டு, கௌரவ உயர்கல்வி அமைச்சரூடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இவ் அறிக்கையின் பிரதியொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஏற்புக்காக சமர்ப்பிக்கப்படும். உசாத்துணைத் தேவைகளுக்காக இதன் பிரதிகள் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் வைக்கப்படும்.

2011 ஆண்டறிக்கையின் பொருளடக்க சீராக்கமும் கட்டமைப்பும் பொது முயற்சித் திணைக்களத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப அதன் வழிகாட்டற்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்**

## உயர்கல்வி அமைச்சு

**கௌரவ எஸ்.பீ. திசாநாயக்க**
**உயர் கல்வி அமைச்சர்**
**உயர் கல்வி அமைச்சு**

**கௌரவ நந்தமித்திர ஏக்கநாயக்க**
**உயர் கல்வி பிரதியமைச்சர்**
**உயர் கல்வி அமைச்சு**

**தொடர்பு**

இல. 18.
வாட் இடம்
கொழும்பு 7
www.mohe.lk

### நோக்கு

2020 ஆம் ஆண்டளவில் இலங்கையினை உயர்கல்விக்கான உன்னதமிகு சர்வதேசக் கேந்திரநிலையமாக காணுதல்.

### இலக்கு

ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுவதற்கு புத்தாக்க தீர்வுகளை வழங்கத்தக்க சிறந்த புத்திஜீவிகள், தொழில்வாண்மையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் முயற்ச்சியாளர்களை உருவாக்குவதற்கான ஒரு பங்கேற்பு செயன்முறையூடாக வினைத்திறன்மிக்க, பயனுறுதியுள்ள வகையில் பெறுபேற்று மயப்படுத்தப்பட்ட கொள்கைகள், உபாய முறைகளை வடிவமைத்து, அமுல்படுத்துவதன் மூலம் இலங்கையின் உயர்கல்வி முறையின் மாணவர்கள், கைத்தொழில் பதவியினர், ஏனைய பங்காளர்களை வழிப்படுத்தல்.

## குறிக்கோள்கள்

1. அதிகரித்த வாய்ப்புகளும் உயர்கல்விக்கான வழிகளும்
2. மாற்றப்பட்டதும் புதிய உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களும்
3. விருத்தியான பட்டதாரிகளின் தரமும் தொழிலுக்கு அமர்த்தக் கூடிய தன்மையும்.
4. அக்கறையுள்ளோரின் திருப்தியில் விருத்தியடைந்திருத்தல்
5. உலகளாவிய தொடர்பு, பரிமாற்றம் மற்றும் இயலுமை போண்றவற்றில் விருத்தியடைந்திருத்தல்.
6. அதிகரித்த ஆய்வு, பிரசுரம் மற்றும் வர்த்தக மயமாக்கம்.
7. முதலீடுகளையும் வெளிநாட்டுச் செலாவனியினையும் கவர்வவதற்காக மாற்றப்பட்ட உயர்கல்வி.
8. சுதந்திரத்துடன் போட்டியும் தனிச்சிறப்பும் பெற சக்தியளிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
9. பட்டதாரிகளின் புதிய தொழிலினை உருவாக்கும் தன்மையை உயர்த்துதல்.
10. உயர்கல்வித்துறையின் பயனிலும் திறனிலும் விருத்தியடைந்திருத்தல்
11. தேசிய அபிவிருத்தி, நல்லிணக்கம், அமைதி போண்றவற்றுக்கான உயர்ந்த பங்களிப்பு.
12. தேசிய உயர்கல்வி முறைமையின் உட்கட்டமைப்பு வசதிகளில் விருத்தியடைந்திருத்தல்.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பேராசிரியர் எஸ்.வீ.டீ.ஜீ. சமரநாயக்க**
தவிசாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன**
உதவித் தவிசாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**திரு. திஸ்ஸ நந்தசேன**
செயலாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### தொடர்பு

இல. 20.
வாட் இடம்
கொழும்பு 7
www.ugc.ac.lk

### நோக்கு

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினது நோக்கானது உலகப் போக்குகளுக்கு அமைவாக தேசிய தேவைகளுக்கும் அவாக்களுக்கும் பொருத்தமான அதி உயர் தரத்திலான ஒரு பல்கலைக்கழக முறைமையினை அபிவிருத்தி செய்தலாகும்.

### இலக்கு

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினது இலக்கானது, உயர் கல்வியின் ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து, கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை பல்வகைப்படுத்தலுக்கும் தர உறுதிப் படுத்தலுக்கும் மற்றும் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் விசேட திறமை கொண்ட நிலையங்களைத் தோற்றுவிப் பதற்கும் வசதி செய்வதனால், நாட்டினது தேவைகளுடன் தொடர்புபட்ட அதிஉயர் மட்டங்களிலான கற்றல், தொழில்சார் பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு அர்ப்பணிக்கின்றதும், பொது மக்களுக்கு பொறுப்புடையதுமான ஒரு பரந்த அளவில் அடையும் வழியுடைய பல்கலைக்கழக முறைமையினை மூலவளங்களை பங்கிடுதலின் ஊடாக விருத்திசெய்வதும், நிலைநிறுத்துவதும் ஆகும்.

## இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி எஸ்.எம். முஹம்மது இஸ்மாயில்**
**உப வேந்தர்**
**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**ஜனாப். எச். அப்துல் சத்தார்**
**பதிவாளர்**
**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

### தொடர்பு

த.பெ.இல. 01
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் # 32360
தொலைபேசி (பொது): +94 67 22 55062-64
தொலைநகல் (பொது):: + 94 67 22 55217
www.seu.ac.lk

### நோக்கு

சர்வதேசரீதியில் பிரபல்யமான தெற்காசியாவின் அறிவு மையமாகத் திகழ்தல்

### இலக்கு

சர்வதேசரீதியில் பிரபல்யமான தெற்காசியாவின் அறிவு மையமாகத் திகழ்வதற்கு பல்வேறுபட்ட துறைகளிலும் தொழிலுக்கமர்த்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல், புதிய அறிவினை உருவாக்கலும் விரிவுபடுத்தலும், நெகிழ்வுத்தன்மையுள்ள கல்விக்கான பரந்த வாய்ப்புக்களை வழங்கல், மற்றும் பிராந்திய புத்தயிரூட்டலுக்கான அறிவு மற்றும் புதிது புனையும் மத்திய நிலையமாகத்திகழும் அதேவேளை வினைத்திறன்மிக்க முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்தலும் அமைதி நிறைந்த, திருப்திகரமான, முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட சமுதாயத்தை உருவாக்குதல்.

## இலக்கு

பின்வரும் இலக்ககள் தனது சக்கிவாய்ந்த பரந்தளவான ஆராய்வினை உரவாக்குவதாக இப்பல்கலைக்கழகம் அடையாளம் கண்டுள்ளது.

## குறிக்கோள்கள்

1. பல்கலைக்கழக கல்வியில் விஷேடத்திறமையின் மையமாக உள்நாட்டினதும் வெளிநாட்டினதும் அங்கீகாரத்தினைப் பெறல்.

2. ஆய்வு, புத்தகம், புதிய தொழிலை உருவாக்கும் திறமை போன்றவற்றின் மையத்துக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

3. கல்வியை வழங்குவதற்கும் மற்றும் பிராந்திய, தேசிய தேவைகளுக்கும் கைத்தொழில் துறையின் எதிர்பார்க்கைக்கும் ஈடுகொடுக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாக இருத்தல்.

4. எல்லா நடவடிக்கைகளிலும் விஷேட திறமையை உருவாக்குவதற்காக பல்கலைக்கழகத்தில் அறிவு சார்ந்த, பௌதீக மற்றும் சமூக சூழலினை உயர்த்துதல்.

5. உயர்ந்த பணிகளையும் திறனினையும் பெறுவதற்காக திருப்தியடைந்தும், பூரணமானதும், ஊக்கமானதுமான அக்கறையுள்ள சமுதாயத்தினை உருவாக்கல்.

6. கைத்தொழிதுறையினாலும் அரசாங்கத்தினாலும் வேண்டப்படும் சிறப்பு ஆலோசனைக்கான பிராந்திய அறிவு மையமாகத் திகழ்தல்.

7. முன்னேற்றகரமான நிருவாக முறைமையும், நிதிமுகாமைத்துவமும் மற்றும் திறன்வாய்ந்த கூட்டுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றினூடாக சிறந்த இணைக்கப்பட்ட ஆட்சியை உருவாக்கல்.

## 01. உபவேந்தரின் மதிப்புரை

### (அ) சுருக்கமான அறிமுகம்

1975 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கையின் 10வது தேசிய பல்கலைக்கழகமாகும். 230 ஏக்கர் நிலப்பரப்பில் பிரதான வளாகம் ஒலுவிலில் அமைந்துள்ளதுடன், 40 ஏக்கர் நிலப்பரப்பில் பிரயோக விஞ்ஞான பீடம் சம்மாந்துறையில் அமைந்துள்ளது. தற்பொழுது மிகக்குறுகிய காலத்தில் இப்பல்கலைக்கழகம் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றமடைந்துள்ளது. இலங்கையிலும் வெளிநாட்டிலுமுள்ள தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் கேள்விக்கேற்ப தொழிலசார் பட்டதாரிகளை உருவாக்குவதற்கான கல்விசார் மேம்பாட்டில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உறுதியான நோக்கினை கொண்டு செயற்படுகின்றது. அத்துடன் பல்துறைசார் ஆய்வுக் கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்கும் பயனாளிகளினதும் சமூகத்தினதும் தேவையினை நிறைவு செய்வதற்கும் பாடுபடுவதுடன் இல்பல்கலைக்கழகம் இப்பிராந்தியத்தின் அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் பாரியளவில் பங்களிப்புச் செய்கின்றது.

### தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள்

தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது முகாமைத்துவமும் வர்த்தகமும், கலையும் கலாச்சாரமும், பிரயோக விஞ்ஞானங்கள், இஸ்லாமிய கற்கைகளும் அரபுமொழியும் ஆகிய நண்கு பீடங்களை கொண்டுள்ளது. தற்பொழுது பின்வரும் கல்விசார் திணைக்களங்கள் இப்பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றன.

| **பீடங்கள்** | **திணைக்களங்கள்** |
|---|---|
| கலையும் கலாச்சாரமும் | சமூகவிஞ்ஞானங்கள், மொழி, புவியியல் |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | கணக்கியலும் நிதியும், முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவப் பிரிவு |
| பிரயோக விஞ்ஞானங்கள் | உயிரியல், கணிதவியலும் பௌதீக வியலும் |
| இஸ்லாமிய கற்கைகளும் அரபுமொழியும் | இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி |

**தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பின்வரும் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை நடாத்துகின்றது.**

| | |
|---|---|
| பட்டப்படிப்புகள் | பி.பிஏ, பி.கொம், எம்.ஐ.ரி இல் பி.எஸ்சி, பி.ஏ, பி.எஸ்சி. |
| பட்டப்படிப்புத் துறைகள் | 20 பட்டப்படிப்புத் துறைகள் வெளிவாரி பட்டங்களும் தொழில்சார் கற்கைநெறிகளும் பட்டப்படிப்பு/ டிப்ளோமா/சான்றிதழ்/பயிற்சி திட்டங்கள் |

**பட்டமேற்படிப்பு கற்கைகள்**

முகாமைத்துவ வர்த்தக பீடமானது இந்நாட்டு மக்களின் உயர்கல்வித் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கிலும் கற்பித்தல் மற்றும் ஆய்வு மேம்பாட்டிற்காகவும் நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் (எம்பிஏ), முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (பிஜிடிஎம்) வையும் வழங்குகின்றது.

**ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது தொழில்முனைவு, சர்வதேச வர்த்தகம், சுற்றுலாத் துறையும் விருந்தோம்பலும், தொழிற்துறைகணிதவியல், தாதிமை, துணைமருத்துவ விஞ்ஞானங்கள், கல்வி போன்ற துறைகளில் இளமானிப்பட்டங்களையும் எம்ஏ, எம்பில், எம்எஸ்சி, போன்ற பட்ட மேற்படிப்பு பட்டங்களையும் மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

**தொடர்ச்சியான கல்வித்தர மேம்பாடு**

- பல்கலைக்கழகமானது பாடவிதான மீளாய்வுகளிலும் நிறுவன மீளாய்வுகளிலும் வெற்றிகரமாக இருந்தது.
- தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் பாடவிதானங்களை நவீன மயப்படுத்ததல்.
- பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஆய்வு பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
    - தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது வருடாந்தம் சர்வதேச ஆய்வரங்கினை நடாத்திவருவதுடன் கல்விசார் ஊழியர்கள் பல்வேறுபட்ட ஆய்வுகளில் ஈடுபடுவதன்மூலம் பிராந்திய மற்றும் தேசிய ரீதியிலான மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்கின்றனர்.
    - பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவம் தொடர்பான ஆய்விதழ் மற்றும் ஏனைய பிரசுரங்களும் வெளியீடு செய்யப்படுகின்றன.

- ஆய்வு பண்பாட்டினை முன்னேற்றுவதற்காக ஆய்வு மையமொன்று உருவாக்கப்பட்டள்ளது.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்துறை நிறுவணங்களுடன் கூட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
- ஆய்வு மற்றும் வெளியீடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச ரீதியில் பெயர்பெற்ற வெளியீட்டாளர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- கல்விசார் ஊழியர்களுள் கலாநிதிப்பட்டம் பெற்றவர்களின் விகிதாசாரம். தற்போது உள்ள கல்விசார் ஊழியர்களுள் 25% வீதாசாரமானோர் கலாநிதிகளாக உள்ளனர். அத்துடன் நடைமுறையில் உள்ள முறையான தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக 2015ம் ஆண்டளவில் கல்விசார் ஊழியர்களுள் 50% மானோர் கலாநிதிப் பட்டம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது கல்விசார் ஊழியர்களுக்கான பயிற்ச்சிகளை பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு மையத்தின் அனுசரனையுடன் வழங்கிவருகிறது.
- ஆய்வுகள், பயிற்சி மற்றும் மேம்பாடு போன்றவற்றிற்காக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் (ஐக்கிய இராச்சியம், சீனா, மலேசியா மற்றும் இந்தியா) புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

**உலக தரப்படுத்தல்**

- உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தலில் முன்னிடம் பெறுவதற்கு தேவையான அளவீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழக்தினை உலக பல்கலைக்கழக தரப்படுத்தலில் 2014ம் ஆண்டளவில் சிறந்த 8000 பல்கலைக் கழகங்களுக்குள்ளும் 2015ம் ஆண்டளவில் இணையத்தள அளவீட்டில் (வெபோமெற்றிக்) இல் 3000 பல்கலைக் கழகங்களுக்குள்ளும் அத்துடன் 2015ம் ஆண்டளவில் தெற்காசியாவில் உள்ள சிறந்த 55 பல்கலைக் கழகங்களுக்குள் கொண்டுவருதற்கென கல்விசார் ஊழியர்களைக் கொண்ட விஷேட செயற்பணி குழு அமைக்கப்பட்டு வெளிவாரியான அறிஞர்களுடனான தெடர்புகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.
- தகவல் தொழில் நுட்ப அறிஞர்கள் மற்றும் கல்வியியலாளர்களுக்குமான பயிற்சிகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

## பட்டதாரிகளுக்குள் தொழில்முனைவுக் கலாச்சாரம்

- பல்கலைக் கழகமானது தொழில் மற்றும் வியாபார கிராமத்தினை நிறுவகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இவ் எண்ணக்கருவினூடாக பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது தொழில் முனைவுத்திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் பல்கலைக்கழகத்தில் கற்கும் போதே உழைக்கும் வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும். மாணவர்கள் தொழில் உலகின் முதற்தர அனுபவத்தினை பெறுவதோடு அவர்களை அவர்களது சொந்த தொழில் முயற்சிகளையும் ஆரம்பிக்க இது ஆர்வமூட்டும்.

- தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது தொழில்முனைவகம் தொடர்பான கலாச்சாரத்தை ஊக்குவிக்க பின்வரும் தந்திரோபாயங்களை வகுத்துள்ளது.

  - தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது இளைஞர் தொழில் முனைவு அமைப்பொன்றினை உருவாக்கியுள்ளதுடன் இவ்வமைப்பு தற்பொழுது மூன்று தொழில் நிறுவணங்களைக் கொண்டள்ளதுடன் இது 2015ம் ஆண்டளவில் 10 தொழில் நிறுவணங்களாக அதிகரிக்கப்படும். மாணவர்கள் அவர்களின் பட்டப்படிப்பின் பின்னர் தங்களின் சொந்த தொழில் முயற்சியை உருவாக்கக்கூடியதாக உள்ளதுடன் தொழில் வழங்குனர்களாகவும் காணப்படுவர்.

  - அனைத்து துறைகளினதும் கல்விசார் கல்வி நிகழ்ச்சித்திட்ட பாடவிதானங்களிலும் தொழில் முறை செயற்திறன் உள்ளடக்கப்பட்டுள்ளது.

  - மாணவர்கள் தொழில் வாய்ப்புக்களைக் கண்டறிந்து கொள்ளும் கருத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர்.

## இன ஒருங்கிணைப்பு

- அனைத்து மாணவர்களுக்கும் இனஒருங்கிணைப்பு சம்பந்தமான பாடவிதானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள மொழி பேசும் மாணவர்களுக்கு தழிழ் மொழியும், தழிழ் மொழி பேசும் மாணவர்களுக்கு சிங்கள மொழியும் கற்பிக்கப்படுகின்றது.

- பிராந்திய ரீதியான தனித்துவங்களை வெளிக்காட்டும் வகையில் மாதந்தோறும் கலாச்சார தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக சமுதாயத்தின் மத்தியில் இன ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதற்கான கலாச்சார நிகழ்ச்சிகள் எற்பாடு செய்யப்படுகின்றன.

- மூன்று சமூகங்களுக்கடையிலும் சமூக ஒற்றுமையை நடைமுறைக்கு கொண்டுவரும் வகையில் சிங்கள மாணவர்களுக்கு பௌத்த விகாரையும், தழிழ் மாணவர்களுக்கான இந்து கோயிலும் அமைப்பதற்கு பல்கலைக்கழக வளாகத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நூலகம்**

- பிரதான நூலகத்தின் மூலநோக்கானது கல்வி இயல்புடையதாகும் ஏனெனில் பல்கலைக்கழக மாணவர்களும் பீட உறுப்பினர்களும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் முதற்தரத்தினை அடைவதற்கு இது உதவுகின்றது .

- நூலகமானது பல்வேறு துறைகளின் 85000 தொகுப்புக்களைக் கொண்டுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தரமான பொருட்களையும், சேவைகளையும், நிகழ்ச்சிகளையும் வழங்குவதுடன் மாறுபடும் தகவல் தேவைக்கு ஏற்ப ஆக்கபூர்வமான சீரமைப்பினை செய்து தேசிய, சர்வதேச மட்டங்களிலுள்ள புதிய சவால்களுக்கு புதுமையான வகையில் பதிலளிக்கின்றது.

**முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தல்**

முகாமைத்துவ முறைமையின் செயல்திறன், விளைவு, உற்பத்திதிறன் போன்றவற்றினை மேம்படுத்துவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகமானது பீட அபிவிருத்தி திட்டம், கூட்டு நிறுவனத்திட்டம் மற்றும் பெருந்திட்டம் போன்றவற்றினை தயாரித்துள்ளது.

- திட்டங்களை மேம்படுத்தி, கண்காணிக்க குறிக்கோள் அலுவலகமொன்று பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

- நிருவாகத்தின் அனேக பிரிவுகள் கணணி மயப்படுத்தப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களுக்கு அறிவுத்திறன் விருத்தி திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

- அனைத்து ஊழியர்களும் வேலை செய்வதற்கு உகந்த, மிகச்சிறந்த சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- நிருவாகிகளுக்கும் அவர்களது ஊழியர்களுக்குமிடையில் உள்ளன்புள்ள உறவு முறைமை பேணப்படுகின்றது.

- குறிப்பிட்ட சில இட அமைவுகளை கண்காணிப்பதற்காக "சிசிடிவி" ஒளிப்படக்கருவி முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- நிருவாக, கல்விசாரா ஊழியர்களுக்கு விரல் அடையாள வரவுப்பதிவு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## நகரிய நிகழ்ச்சித்திட்டங்கள்

- சிறுவர் பராமிப்பு, சிறுவர் பூங்கா போன்றவற்றிற்கான கட்டிடத் தொகுதி
- பாதை வலைப்பின்னலை மேம்படுத்தல் (முன்னேற்றத்தில்)
- களியோடை ஆற்றின் மண்ணரிப்பை தடுத்துநிறுத்தல் (முன்னேற்றத்தில்)
- பல்பொருள் விற்பனை நிலையத்திற்கான கட்டிடத் தொகுதி
- ஒன்றுகூடல் சதுக்கம், திறந்த அரங்கு, வெளிக்கள பயிற்சிநிலையம், மூலிகைத்தோட்டம், நீர்வாழிணக்காட்சியகம் மற்றும் பல்கலைக்கழக பூங்கா போன்றவற்றிற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

## மாணவர் வாழ்க்கையும் பொழுது போக்கும்

- மாணவர்களின் களிப்பு மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி போன்வற்றிற்கு பங்களிக்கும் கல்வி ஆர்வம் மற்றும் சமூக ஓய்வுநேர நடவடிக்கைகள் போன்றவற்றிற்குப் பொருந்தக் கூடியவகையில் தென்கிழக்குப்பல்கலைக் கழக கற்கை விருப்பத் தேர்வுகள் காணப்படுகின்றன.
- மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டப்புறச் செயல்களில் தங்களது வர்ணங்களை காட்டியுள்ளனர். இன்றுவரை உதைப்பந்தாட்டம், தடகளம் மற்றும் விளையாட்டு போன்றவற்றில் 68 தங்க பதக்கங்கள். 65 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 100 பித்தளை பதக்கங்கள் போன்றவற்றை மாணவர்கள் பெற்றுள்ளனர்.
- உயர்கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட திறன் நிகழ்ச்சித்திட்டங்களில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றனர்.

## மாணவர் துணைசேவைகளும் நலன்புரியும்

- மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அவர்களின் மனக்குறைகளை கையாண்டு, நெறிப்படுத்தி மீட்ச்சியளிக்கும் வகையில் மாணவர் துணைச்சேவைகளும் நலன்புரியும் மத்திய மயப்படுத்தப்பட்டுள்ளது. முறைமையின் நேரிய தொழிற்பாட்டுக்காக பல்வேறு சேவைப்பிரிவுகளுக்குள் ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஏற்படுத்தி மேற்பார்வை செய்கின்றது.
- புதிய கலாச்சாரம் ஒன்றை புழக்கத்திற்கு கொண்டுவரும் வகையில் மாணவர்களின் குடியிருப்புக்கு மரபுரீதியாக வழங்கப்பட்ட 'விடுதி' எனும் பெயர் 'நட்புமனை' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள்

- இரத்ததானம், சமூக சிரமதான செயற்பாடுகள், சமூக அபிவிருத்திக்கான பயிற்சிப் பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்துதல் போன்ற பல்வேறு சமூக சேவைகளில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுகின்றனர்.

- தொந்தரவு மற்றும் சமூக எதிர் நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடாத சூழல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- சுமூகமான சூழல் ஒன்றை பேணுதல்: கடந்த பல வருடங்களாக மாணவர் கைகலப்போ அல்லது தொந்தரவுகளோ காணப்படவில்லை இதன்விளைவாக எமது மாணவர்கள் பல்கலைக்கழகத்தை அழகுபடுத்ததல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களில் பல்கலைக்கழகத்தின் பங்காளிகளாக செயற்படுகின்றனர்.

- தொழிற்சங்க நடவடிக்கைகளின் போதும் பல்கலைக்கழக சமூகத்தின் ஆதரவுடன் தடங்கலற்ற சீரான பல்கலைக்கழக தொழிற்பாட்டினை பேணல்.

- சமூகங்களுக்கிடையிலான இன ஒருமைப்பாடு மற்றும் பல்சமயத்திற்கேற்ற சூழல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதால் இப்பல்கலைக்கழகத்தில் குறுக்குக் கலாச்சார ஒருங்கிணைவு மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

- தென்கிழக்குப்பல்கலைக்கழகம் ஏனைய நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதால் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வெளிநாட்டுத் தொண்டர்களை பெற்றுள்ளது.

- பல்கலைக்கழகமானது அமைதியான கல்விச்சூழலுக்கு வழிவகுக்கக் கூடிய பசுமையானதும் தூய்மையானதுமான சூழல் ஒன்றை பேணிவருகின்றது.

## பல்கலைக்கழகத்தில் அக்கறையுள்ளவர்களின் திருப்தி

- பல்கலைக்கழகத்தின் சீரானதும், செயற்றிறன் வாய்ந்ததும், விளைதிறன் வாய்ந்ததுமான தொழிற்பாட்டினையும் பட்டதாரிகளை வேலையில் ஈடுபடுத்தக் கூடிய தன்மையையையும் கவனத்திற் கொண்டு சர்வதேச மற்றும் வெளிநிலை அக்கறையுள்ளோர் பல்கலைக்கழகத்தின்மீது திருப்தியையும் நம்பிக்கையையும் வெளிக்காட்டுகின்றனர். அக்கறையுள்ளோரின் திருப்தியை அளவீடு செய்வதற்கு வருடாந்தம் ஓர் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் பல்கலைக்கழகத்தின்மீது உயர்வான திருப்த்தியை அவர்கள் பேனுவதற்கு தேவையான தந்திரோபாயங்கள் மேற்கொள்ளப்படும்.

**பல்கலைக்கழகத்தில் அக்கறையுள்ளவர்களின் திருப்திக்கான விஷேட திட்டங்கள் / விஷேட பிரச்சினைகள்**

- இப்பல்கலைக்கழகத்திற்கு துருக்கி, சீனா, போன்ற நாடுகளிலிருந்து வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு உள்நாட்டு முகவர்களிடமிருந்து விசாரணைகள் கிடைக்கின்றன. எனவே வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நிபந்தனைகள், கட்டணவிபரங்கள் நுழைவுசீட்டு வழங்கும் நடைமுறைகள் போன்றவைபற்றி உயர்கல்வி அமைச்சிலிருந்து எங்களுக்குத் தெளிவான உபதேசங்கள் தேவைப்படுகின்றன.

- வருகை கல்விமான்களுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்குமான தங்குமிடவசதிகளையும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக்கற்கைகளுக்கான வசதிகளையும் விரிவுபடுத்தும் பெருட்டு பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலுள்ள 20 ஏக்கர் பரப்புள்ள நிலம் நில ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளது ஆனால் இது நில ஆணையாளர் அறிவுறுத்தியபடி இன்னும் பல்கலைக்கழகத்திற்கு கையளிப்புச் செய்யப்படவில்லை. இத்திட்டத்திற்கான பெருந்திட்டம் ஏலவே தயாரிக்கப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழகப் பேரவை**

பல்கலைக்கழக பேரவையானது பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகார சபையாகவும், பரிபாலன அதிகார சபையாகவும் காணப்படுகின்றது. பதவிவழி உரிமையால் உப வேந்தர் இதன் தவிசாளராக செயற்படுவார். பல்கலைக்கழக மூதவையினாலும், பீட சபைகளினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகளை அங்கீகரிக்கின்ற இறுதி அதிகார அமைப்பாக இது காணப்படுகின்றது. பேரவையின் உப குழுக்களாக நிதிக்குழு, ஆளணிக்குழு, காணி, கட்டிட பராமரிப்புக் குழு, கணக்காய்வு, முகாமைத்துவக் குழு, கேள்விக் குழு, ஆட்சேர்ப்புத் தெரிவுக் குழு போன்றன காணப்படுகின்றன. பதிவாளர் இதன் செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

**பதவி வழி உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| கலாநிதி எஸ்.எம். முஹம்மது இஸ்மாயில் | உபவேந்தர் (தவிசாளர்) |
| திரு. எம்.பீ.எம். அம்ஜத் | பீடாதிபதி, முகாமைத்துவ, வர்த்தக பீடம் |
| கலாநிதி (திருமதி) எம்.ஐ.எஸ்.சபீனா- | பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் |
| திரு. எஸ்.எம். ஆலிப் | பீடாதிபதி, கலை கலாசார பீடம் (22.8.2011 வரை) |
| திரு.கே.எம்.எம். பழீல்ஹக் | பீடாதிபதி, கலை கலாசார பீடம் (23.8.2011 தொடக்கம்) |
| திரு. எம்.எஸ்.எம். ஜலால்தீன் | பீடாதிபதி, இஸ்லாமியக் கற்கைகள் அறபுமொழி பீடம் (13.11.2011 வரை) |
| திரு.எ.பி.எம்.அலியார் | பீடாதிபதி, இஸ்லாமியக் கற்கைகள் அறபுமொழி பீடம் (30.11.2011 தொடக்கம்) |

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| பேராசிரியர் தயந்த விஜேசேகர | |
| கலாநிதி பீ.கே.சீ.எல். ஜயசிங்க | |
| திரு. பீ.ரீ.ஏ. ஹசன் | (07.07.2011 வரை) |
| திரு. எம்.வை. அன்வர் சியாத் | (07.07.2011 வரை) |
| கலாநிதி. எஸ்.எல். றியாஸ் | (07.07.2011 வரை) |
| திரு. எம்.எம். அபுல்கலாம் | (07.07.2011 வரை) |
| திரு. அன்வர் எம். முஸ்தபா | (07.07.2011 வரை) |
| திரு. எல்.ஆர்.எஸ். பண்டார | (07.07.2011 வரை) |
| பேராசிரியர்.எ.சண்முகதாஸ் | (22.07.2011 தொடக்கம்) |
| திரு.என்.எம். சஹீட் | (22.07.2011 தொடக்கம்) |
| திரு.கே.எம்.எச். அக்பர் | (22.07.2011 தொடக்கம்) |
| திரு. எம்.ரி.எச்.எம். சஹீட் | (22.07.2011 தொடக்கம்) |
| திரு.எ.எல். பதுார்தீன் | (22.07.2011 தொடக்கம்) |
| திரு.எம்.என்.எம். நபீல் | (22.07.2011 தொடக்கம்)) |

**மூதவையினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| கலாநிதி எப்.சீ. ராகல் | முதுநிலை விரிவுரையாளர், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் (27.05.2011 வரை) |
| கலாநிதி ஏ. ஜ.ஃபர் | முதுநிலை விரிவுரையாளர், முகாமைத்துவ வர்த்தக பீடம் (01.12.2011 வரை) |
| கலாநிதி. எம்.ஐ.எம்.கலீல் | முதுநிலை விரிவுரையாளர், கலைகலாச்சாரப் பீடம் (23.06.2011 தொடக்கம்) |
| கலாநிதி செந்தில்நிதி | முதுநிலை விரிவுரையாளர். பிரயோக விஞ்ஞான பீடம் (23.06.2011தொடக்கம்) |

**செயலாளர்**

திரு. எச். அப்துல் சத்தார், பதிவாளர்

## பல்கலைக்கழக மூதவை

பல்கலைக்கழக மூதவையானது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்திட்டங்களை முகாமைசெய்வதற்கான நிறைவேற்றுச்சபையாகும். பொதுவாக இக்குழு பல்கலைக்கழகத்தின் உரித்துடையவர்களான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகஅமைப்புகள் மற்றும் அரசாங்கத்திற்கும் பொறுப்புக்கூறும் கடமையுடையது. அதாவது சிறந்த வினைத்திறன்மிக்க கல்விசார் பெறுபேறுகளை உறுதிசெய்தல் பீடங்கள், துறைகள், அலகுகள் என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் பாடவிதான வடிவமைப்பு, பரீட்சை முறைமைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்திக் கட்டுப்படுத்துகின்றது. அத்துடன் பீடங்களினால் தயாரிக்கப்பட்டு பீடச்சபையால் சிபார்சு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகயிற்கான இறுதி அங்கீகாரம் வழங்குவதுடன் பேரவைக்குறிப்பேட்டில் பதிவதற்காக முன்னிலைப்படுத்தும் அதிகார சபையாகும் . மேலும் தேசத்தின் அபிவிருத்தியை உச்சப்படுத்துவதற்கான ஆய்வுகள் புத்தாகக்கங்களிற்கான அதிகாரமளிக்கும் சபையாகவும் விளங்குகின்றது, நூலகக்குழு, கல்வி விடுமுறை வழங்கல்குழு, அனுமதிக்குழு, ஆராய்ச்சி வெளியீட்டுக்குழு, பாட விதான மதிப்பீட்டுக்குழு என்பன இதன் உப குழுக்களாகும். பதவிவழியில் பதிவாளர் இதன் செயலாளராகவுள்ளார்.

## பதவி வழி உறுப்பினர்கள்

| | |
|---|---|
| கலாநிதி. எஸ்.எம். முஹம்மது இஸ்மாயில் | உபவேந்தர் |
| திரு. எம்.பீ.எம். அம்ஜத் | பீடாதிபதி, முகாமைத்துவ, வர்த்தக பீடம் |
| கலாநிதி. (திருமதி) எம்.ஐ.எஸ். சபீனா | பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் |
| திரு. எஸ்.எம். ஆலிப் | பீடாதிபதி, கலை கலாசார பீடம் (22.8.2011 வரை) |
| திரு. கே.எம்.எம். பழீல்ஹக் | பீடாதிபதி, கலை கலாசார பீடம் (23.8.2011 தொடக்கம்) |
| திரு. எம்.எஸ்.எம். ஜலால்தீன் | பீடாதிபதி, இஸ்லாமியக் கற்கைகள் அறபுமொழி பீடம் (13.11.2011 வரை) |
| திரு. ஏ.பி.எம். அலியார் | பீடாதிபதி, இஸ்லாமியக் கற்கைகள் அறபுமொழி பீடம் (30.11.2011 தொடக்கம்) |
| கலாநிதி. ஏ. ஜ.ஃபர் | துறைத்தலைவர் - நிதி மற்றும் கணக்கியல் |
| திரு. ஏ.பி.எம். அலியார் | துறைத்தலைவர் - அறபு மொழிகள் (29.11.2011 வரை) |
| திரு. எம்.எச்.ஏ. முனாஸ் | துறைத்தலைவர் - அறபு மொழிகள் (30.11.2011 தொடக்கம்) |
| திரு. இ.எம்.ஜெ.எம். ரிஷ்வி | துறைத்தலைவர் - உயிரியல் விஞ்ஞானம் |
| திரு. எம்.எல். பௌசுல் அமீர் | துறைத்தலைவர் - புவியியல் (01.08.2011 தொடக்கம்) |
| திரு. எஸ்.எம்.எம். மஷாஹிர் | துறைத்தலைவர் - இஸ்லாமிய கற்கைகள் (10.03.2011 வரை) |
| கலாநிதி. எம்.ஐ.எம். ஜெசீல் | துறைத்தலைவர - இஸ்லாமிய கற்கைகள் (28.03.2011 தொடக்கம்) |
| திரு. கே. ரகுபரன் | துறைத்தலைவர் - மொழித்துறை (26.05.2011 வரை) |
| கலாநதி. எம்.ஏ.எம். ரமீஸ் | துறைத்தலைவர் - மொழித்துறை (27.05.2011 தொடக்கம்) |
| திருமதி. சரீனா யு.எம்.ஏ கபூர் | துறைத்தலைவர் - முகாமைத்தவம் |
| கலாநிதி. பி. இளங்கோ | துறைத்தலைவர் - கணிதவிஞ்ஞானம் |

| | |
|---|---|
| கலாநிதி. ஏ. ஜ.ஃபர் | துறைத்தலைவர் - கணிதவிஞ்ஞானம் (15.05.2011 தொடக்கம்) |
| கலாநிதி. என்.டபிள்யு.பி. பாலசூரிய | துறைத்தலைவர் - பௌதிக விஞ்ஞானம் (17.03.2011 வரை) |
| கலாநிதி. ஆர். செந்தில்நிதி | துறைத்தலைவர் - பௌதிக விஞ்ஞானம் (14.04.2011 தொடக்கம்) |
| திரு. கே.எம்.எம். பலீல்ஹக் | துறைத்தலைவர் - சமூகவிஞ்ஞானம் (30.06.2011 வரை) |
| திரு. எம்.ஏ. ஜப்பார் | துறைத்தலைவர் - சமூகவிஞ்ஞானம் (19.09.2011 தொடக்கம்) |

## தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்

| | |
|---|---|
| கலாநிதி. ஆர். செந்தில்நிதி | பிரயோக விஞ்ஞான பீடம் (04.03.2011 வரை) |
| கலாநிதி எப்.சீ. ராகல் | பிரயோக விஞ்ஞான பீடம் (04.03.2011 வரை) |
| கலாநிதி யு.எல். செயீனுடீன் | பிரயோக விஞ்ஞான பீடம் (05.03.2011 தொடக்கம்) |
| திரு. ஏ.என். அஹமட் | பிரயோக விஞ்ஞான பீடம் (05.09.2011 தொடக்கம்) |
| திரு. ஐ.எல். மாஹிர் | கலைகலச்சாரப் பீடம் (24.02.2011 வரை) |
| திரு. எம்.ஏ.எஸ்.எப். சாதியா | கலைகலச்சாரப் பீடம் (16.08.2011 வரை) |
| கலாநிதி. எம்.ஐ.எம். கலீல் | கலைகலச்சாரப் பீடம் (25.02.2011 தொடக்கம்) |
| திரு. எம்.எச்.எ. முனாஷ் | இஸ்ாலமிய கற்கைகள் அறப மொழிகள் பீடம் (30.11.2011 வரை) |
| திரு. எம்.எஸ்.எம். ஜலால்தீன் | இஸ்ாலமிய கற்கைகள் அறப மொழிகள் பீடம் (27.12.2011 தொடக்கம்) |
| கலாநிதி. ஏ.எப்.எம். அஷ்ரப் | கலைகலச்சாரப் பீடம் (17.08.2011 தொடக்கம்) |
| திரு. எம்.எச்.எம். நைறூாஸ் | .இஸ்ாலமிய கற்கைகள் அறப மொழிகள் பீடம் (11.04.2011 தொடக்கம்) |
| திரு. கே.எம். முபாறக் | முகாமைத்துவ பீடம் |
| திரு. ஏ.எம்.எம். முஷ்தபா | முகாமைத்துவ பீடம் |

## செயலாளர்

| | |
|---|---|
| திரு. எச். அப்துல் சத்தார் | பதிவாளர் |

(அ) **செயற்றிட்ட சாதனைகள்**

- பல்கலைக்கழக மூவின மாணவர்களுக்கிடையிலான நல்லுறவு மேம்பாடு மற்றும் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பௌத்த மாணவர்கள், இந்துமாணவர்களின் வழிபாட்டிற்கான வணக்கத்தலங்களை அமைப்பதற்கான காணி வழங்கப்பட்டு வணக்கத்தலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

- தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது மூவின மாணவர்களினதும் பங்குபற்றுதலுடன் வருடந்தோறும் தமிழ் சிங்கள புதுவருட நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த ஊக்கமளிக்கின்றது.

- பல்கலைக்கழக விடுதிகளுக்கு விடுதி மாணவர்களின் உதவியுடன் அனுமதிக்கப்பட்ட செலவினங்களிற்கமைவாக வர்ணம் பூசப்பட்டது. இதன்விளைவாக சுவரொட்டிகளற்ற கற்றல் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

- பிரயோக விஞ்ஞான பீடத்தில் 400 மாணவர்களுக்கான பயன்படுத்தக்கூடிய நவீனமயப்படுத்தப்பட்ட சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சிற்றுண்டிச்சாலை நிர்மானப்பணிகளிற்கு நெற்சந்தைப்படுத்தல் சபைக் கட்டிடத்தில் இருந்த பாவனைக்குதவாத உபகரணங்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களின் உதவியுடன் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

- முதலாவது சர்வதேச ஆய்வரங்கு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு கல்விமான்கள் விஷேடமாக இந்தியாவிலிருந்து பங்குபற்றினர்.

- பின்வரும் புதிய கற்கைநெறிகள் அரச கொள்கை திட்டமிடலுக்கமைவாக கலைகலாசார பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
  மும்மொழி இளநிலை பட்டக்கற்கை நெறி
  கலைப்பட்டதாரிகளுக்கான தகவல் தொழில்நுட்பம்
  விருந்தோம்பல் முகாமைத்துவம்

- மரநாட்டுகை சுத்தப்படுத்துதல் செயற்திட்டங்களினூடாக பசுமையுடன்கூடிய சுத்தமான கல்விச்சூழல் அபிவிருத்தி செய்யப்பட்டது.

- குவைத் அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான நிதியிலிருந்து இரண்டாம் கட்ட ரூபா மூன்று மில்லியன் குவைத் தினார் நிதி பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் பொற்றோர்களுடன் நெருக்கமான உறவுகள் மேலாண்மையால் பகிடிவதையற்ற கல்விச்சூழல் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

- பட்ட மேற்படிப்புகள் அலகு முகாமைத்துவம் மற்றும் வணிக பீடத்தின் கீழ் உருவாக்கப்பட்டு முதலாவது மாணவர்தொகுதி உள்வாங்கப்பட்டுள்ளது.

- திறன் மிக்க சக்திவள முகாமைத்துவத்திட்ட செயற்பாட்டினூடக வளாக மின்சாரவழங்கலிற்கான இணைப்புச் சேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**(ஆ) செயற்றிட்ட தாமதங்கள் / தவறுதல்களிற்கான காரணங்கள்/நியாயப்படுத்தல்கள்**

- நிலையான சொத்துக்களுக்கான வருடாந்த கணக்கெடுப்பறிக்கை பின்வரும் காரணங்களால் பூர்த்தி செய்யப்டவில்லை

  - திணைக்களங்கள் மற்றும் உப பிரிவுகளின் இருப்புப்பதிவுப் புத்தகம் முறையாக பராமரிக்கப்படவில்லை.

  - நிலையான சொத்துக்களுக்கான இருப்புப்பதிவேடு (பொது 287) முறையாக பராமரிக்கப்படவில்லை.

  - கடந்த காலங்களில் ஏற்பட்ட தீ விபத்துக்கள், ஆழிப்பேரலை அழிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு அழிவுகள் போன்ற காரணங்களால் சேதாரங்கள் இழப்புகளை ஈடுசெய்வதற்கான ஏற்பாடுகள் முறையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

**(இ) செயற்சாதனை நிலையை உயர்த்துவதற்கான எதிர்காலத் திட்டம்**

- பல்கலைக்கழகமானது ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

- பல்கலைக்கழகமானது மாணவர்களின் தொகையை 3000 ஆக அதிகரிக்கத்திட்டமிட்டுள்ளது.

- குவைத்திட்ட இரண்டாம் பகுதிக்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- தகவல் தொழில்நுட்ப பீடத்தை நிறுவுதல்

  - இளநிலை பட்டப்படிப்புகள் கற்கை நெறி - மும்மொழி பாடத்திட்டம்.
  - தகவல் தொழில்நுட்பம்
  - விருந்தோம்பல் முகாமைத்துவம்

## 2. பல்கலைக்கழக வளங்கள் / மாணவர்கள்

| பீடம் | கற்கைநெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் ஊழியர் | மொத்த கல்விசாரா ஊழியர் |
|---|---|---|---|---|
| **பிரயோக விஞ்ஞானங்கள்** | உயிரியல் விஞ்ஞானம் | 105 | 20 | 26 |
| | பௌதீக விஞ்ஞானம் | 88 | | |
| **கலை, கலாசாரம்** | கலை (பொது) | 388 | 30 | 10 |
| | கலை (விசேடம்) | 151 | | |
| **இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழி** | அறபுமொழி (பொது) | 136 | 10 | 04 |
| | அறபுமொழி (விசேடம்) | 13 | | |
| | இஸ்லாமிய கற்கைகள் (பொது) | 179 | | |
| | இஸ்லாமிய கற்கைகள் (விசேடம்) | 48 | | |
| **முகாமைத்துவமும் வர்த்தகமும்** | முகாமைத்துவம் | 289 | 24 | 06 |
| | வர்த்தகம் | 138 | | |
| | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | 136 | | |
| | முகாமைத்துவக் கற்கைகளுக்கான தகவல் தொழில்நுட்பம் | 58 | | |
| **நூலகம்** | | | 04 | 20 |
| **ஏனைய திணைக்களம்** | | | - | 126 |
| **மொத்தம்** | | **1729** | **88** | **192** |

### 3. உள்நாட்டு மாணவர் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | உள்ளீர்ப்பு 2010 | 1ம் வருட மாணவர் | 2ம் வருட மாணவர் | 3ம் வருட மாணவர் | 4ம் வருட மாணவர் | பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிரயோக விஞ்ஞானங்கள் | உயிரியல் விஞ்ஞானம் | ஆங்கிலம் | 132 | 50 | 31 | 22 | 2 | 7 |
| | பௌதீக விஞ்ஞானம் | ஆங்கிலம் | 141 | 29 | 32 | 27 | - | 8 |
| கலை, கலாசாரம் | கலை (பொது) | தமிழ் | 124 | 167 | 87 | 134 | - | 2 |
| | கலை (விசேடம்) | தமிழ் | - | - | 59 | 47 | 45 | - |
| இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழி | அறபுமொழி (பொது) | தமிழ் | 103 | 71 | 35 | 30 | - | - |
| | அறபுமொழி (விசேடம்) | தமிழ் | - | - | 4 | 7 | 2 | - |
| | இஸ்லாமிய கற்கைகள் (பொது) | தமிழ் | 156 | 84 | 51 | 44 | - | 4 |
| | இஸ்லாமிய கற்கைகள் (விசேடம்) | தமிழ் | - | - | 19 | 17 | 12 | - |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | முகாமைத்துவம் | ஆங்கிலம், தமிழ் | 151 | 93 | 86 | 64 | 43 | 1 |
| | வர்த்தகம் | ஆங்கிலம், தமிழ் | 93 | 54 | 38 | 40 | 6 | - |
| | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | ஆங்கிலம் | 89 | 79 | 57 | - | - | - |
| | முகாமைத்துவக் கற்கைகளுக்கான தகவல் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | - | - | - | 58 | - | - |
| மொத்தம் | | | **989** | **627** | **499** | **490** | **110** | **22** |

தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் 2011ம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் 2வது பருவகாலத்துக்கான பரீட்சைகள் அனைத்தும் நான்கு மாதங்களுக்கு பிற்போடப்பட்டன, அதனால் 2011ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தங்களது கல்வி நடவடிக்கையை பூர்தி செய்யவேண்டிய 419 மாணவர்கள் 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே பூர்த்தி செய்தனர். மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 22 பட்டதாரி மாணவர்களும் 2011ம் ஆண்டு 1வது பருவகால பரீட்சையை மீண்டும் தோற்ற வேண்டியவர்களாவர்.

### 4. வெளிநாட்டு மாணவர்களின் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | உள்ளீர்ப்பு 2011 | 1ம் வருட மாணவர் | 2ம் வருட மாணவர் | 3ம் வருட மாணவர் | 4ம் வருட மாணவர் | பட்டம்பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| இஸ்லாமிய அறபு மொழி கற்கைகள் | அறபு மொழி (பொது) | தமிழ் | 01 | | | பொருத்தமற்றது | | |


## 05. கல்விசார் உழியர்களின் விபரம்:

| பீடம் | பாடம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கலை, கலாசாரம்** | புவியியல் | தமிழ் | - | - | 03 | - | - | - |
| | தமிழ் | தமிழ் | - | - | 05 | - | - | - |
| | அரசியல் விஞ்ஞானங்கள் | தமிழ் | - | - | 02 | 01 | - | - |
| | பொருளியல் | தமிழ் | - | - | 04 | - | - | - |
| | மெய்யியல் | தமிழ் | - | - | 04 | - | - | - |
| | ஆங்கிலம் | ஆங்கிலம் | - | - | - | 06 | - | - |
| | சமூகவியல் | தமிழ் | - | - | 01 | 01 | - | - |
| | சிங்களம் | சிங்களம் | - | - | 01 | - | - | - |
| | வரலாறு | தமிழ் | - | - | 01 | - | - | - |
| | கணனி தொழில்நுட்பம் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | - | - | - | 04 |
| **இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழி** | அறபுமொழி | தமிழ் | - | - | 03 | - | 03 | - |
| | இஸ்லாமிய கற்கைகள் | தமிழ் | - | - | 02 | - | 01 | - |
| | இஸ்லாமிய கற்கைகள் | தமிழ் | - | - | - | - | 01 | - |
| **முகாமைத்துவமும் வர்த்தகமும்** | முகாமைத்துவம் | தமிழ் | - | - | 08 | - | 01 | - |
| | கணக்கியல் | தமிழ் | - | - | - | - | - | - |
| | வர்த்தகம் | தமிழ் | - | - | 01 | 01 | - | - |
| | வியாபார நிர்வாகம் | தமிழ் | - | - | 01 | - | - | - |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | தமிழ் | - | - | 02 | - | - | - |
| | வியாபார பொருளியல் | தமிழ் | - | - | 01 | - | - | - |
| | வியாபாரக் கற்கைகள் | தமிழ் | - | - | 01 | - | - | - |
| | எம்.ஐ.எஸ் | ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| | எம்.ஐ.ரீ | ஆங்கிலம் | - | - | 02 | - | - | - |
| **பிரயோக விஞ்ஞானங்கள்** | விவசாயம் | தமிழ் | - | - | 01 | - | - | - |
| | தாவரவியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 02 | - | - | - |
| | பூகோள விஞ்ஞானம் | தமிழ்ட∴ ஆங்கிலம் | - | - | 03 | - | - | - |
| | விலங்கியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| | புள்ளிவிபரவியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 02 | - | 01 | - |
| | இரசாயனவியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 03 | - | - | - |
| | கணிதவியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 02 | - | 01 | - |
| | பௌதீகவியல் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 02 | - | - | - |
| | கணணி விஞ்ஞானங்கள் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | 01 | - | 01 | - |
| | பூகோள விஞ்ஞானங்கள் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | - | - | - | - |
| | கணனி விஞ்ஞானங்கள் | தமிழ்∴ ஆங்கிலம் | - | - | - | - | - | 02 |
| **மொத்தம்** | | | | | **59** | **10** | **11** | **06** |

## 06. 2011ம் ஆண்டு வேலையில் ஈடுபடுகின்ற பட்டதாரிகள் விபரம்:

பல்கலைக்கழகமானது ஒவ்வொரு பட்டமளிப்புக்கு முன்னதாகவும் மாணவர்களிடம் வினாக் கொத்தொன்றை வழங்குவதன் ஊடாக அவர்களது வேலைவாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை திரட்டிக் கொள்கின்றது. அதன்அடிப்படையில் 2011ம் ஆண்டு பட்டம் பெற்ற மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விரங்கள் பின்வருமாறு.

| பீடம் | மாணவர்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொழில்செய்பவர்கள் | | தொழிலின் கீழ் உள்ளவர்கள் | | தொழிலற்றோர் | |
| | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் |
| பிரயோக விஞ்ஞானங்கள் | 32 | 56.1% | 3 | 5.3% | 22 | 38.6% |
| கலை, கலாசாரம் | 53 | 24.9% | 23 | 10.8% | 137 | 64.3% |
| இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழி | 19 | 27.1% | 6 | 8.6% | 45 | 64.3% |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | 30 | 53.6% | 4 | 7.1% | 22 | 39.3% |



## 07. கல்விசாரா உழியர்களின் விபரம்:

| பீடம் / பிரிவு | அதி சிரேஷ்ட | சிரேஷ்ட | கனஷ்ட | சிற்றூழியர் |
|---|---|---|---|---|
| பொது நிர்வாகம் | 07 | 01 | 15 | 09 |
| நிதி நிர்வாகம் | 03 | 01 | 10 | 02 |
| களஞ்சியமும் வழங்கல்களும் | 01 | - | 04 | 02 |
| தொழில் வழிகாட்டல் அலகு | - | - | 01 | 01 |
| பாதுகாப்பு சேவைகள் | 01 | - | 12 | 11 |
| போக்குவரத்து சேவைகள் | - | - | 01 | 09 |
| கலை, கலாசார பீடம் | 01 | - | 04 | 06 |
| முகாமைத்துவ வர்த்தக பீடம் | - | - | 04 | 02 |
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | 01 | 01 | 13 | 12 |
| இஸ்லாமிய கற்கைகள் அறபுமொழி பீடம் | - | - | 03 | 01 |
| பரீட்சை சேவைகள் | 01 | - | 07 | 02 |
| நூலக சேவைகள் | - | - | 11 | 09 |
| ஊழியர், மாணவர் நலன்புரிச் சேவைகள் | - | - | 02 | 04 |
| உடற்கல்விப் பிரிவு | - | - | 01 | 02 |
| பராமரிப்பு பிரிவு | - | - | - | - |
| காணி கட்டிடங்கள் | 01 | - | 05 | 17 |
| மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் | - | - | - | 06 |
| விடுதிகள் | - | - | 02 | - |
| மொத்தம் | **16** | **03** | **95** | **95** |

கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கையை சிரேஷ்ட அடிப்படையில் பாகுபடுத்தும் விபரம் வருமாறு

**அதி சிரேஷ்ட ஊழியர்கள்**

**பொது நிருவாகப்பிரிவு**

| | |
|---|---|
| பதிவாளர் | 01 |
| சிரேஷ்ட உதவிப்பதிவாளர்கள் | 03 |
| உதவிப்பதிவாளர்கள் | 02 |
| உள்ளக உதவிக் கணக்காய்வாளர் | 01 |

**நிதி நிருவாகப்பிரிவு**

| | |
|---|---|
| நிதியாளர் | 01 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 01 |
| உதவி நிதியாளர் | 01 |

**களஞ்சிய வழங்கள் பிரிவு**

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 01 |

**பாதுகாப்புச் சேவை**

| | |
|---|---|
| மூத்த பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |

**கலை, கலாசார பீடம்**

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிப்பதிவாளர் | 01 |

**பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்**

| | |
|---|---|
| உதவிப்பதிவாளர் | 01 |

**பரீட்சை சேவைகள்**

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிப்பதிவாளர் | 01 |

**பராமரிப்பு பிரிவு**

**காணி கட்டிடங்கள்**

| | |
|---|---|
| காப்பாட்சியர் | 01 |
| | **16** |

**சிரேஷ்ட ஊழியர்கள்**

**பொது நிருவாகப்பிரிவு**

| | |
|---|---|
| எழுது வினைஞர் சேவையின் பணித்துணை உதவியாளர் | 01 |

**நிதி நிருவாகப்பிரிவு**

| | |
|---|---|
| கணக்குப் பதிவுப் பணித்துணை உதவியாளர் | 01 |

**பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்**

| | |
|---|---|
| எழுது வினைஞர் சேவையின் பணித்துணை உதவியாளர் | 01 |

**இளநிலை உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| எழுது வினைஞர் மற்றும் இணைந்த தர உத்தியோகத்தர்கள் | 95 |

**சிற்றூழியர்கள்**

| | |
|---|---|
| திறன், அலுவலக மற்றும் மும்மைநிலை தரம் | 95 |

## 08. ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரம்:

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயப்படுத்தப் பட்டவை | சமர்ப்பிக்கப் பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆய்வுகளின் எண்ணிக்கை | 11 | - | 53 |
| ஆ. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | - | - | - |
| ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை | 02 | - | - |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை | 11 | - | 01 |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **24** | **-** | **54** |

நான்கு பீடங்களினதும் கல்விசார் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு,சஞ்சிகை,புத்தகம்,கட்டுரை போன்றவற்றின் விபரம் கீழே தரப்படுகின்றது.

**பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்**

**ஆய்வுப் பத்திரிகைகள்:**

**வெளியிடப்பட்டது:**

- ஏ.எம். றஸ்மி. (2011), "Joint Monitoring of Process Mean and Variance with Shewhart Distance Scheme, Sri Lankan", பிரயோக புள்ளி விபரங்களுக்கான சஞ்சிகை, இலங்கை.

- கலாநிதி. ஏ. ஜஹ்பர் மற்றும் சி. ஜியான்பாஓ.(2011), "Identifying Local Influential Observations in Liu Estimator" மெட்றிக்கா சஞ்சிகை, ஸ்ப்பிறிங்கர்.

- கலாநிதி. ஏ. ஜஹ்பர் மற்றும் சி. ஜியான்பாஓ.(2011), "Measuring Local Influential Observations in Modified Ridge Regression", தரவு விஞ்ஞான சஞ்சிகை.

- கலாநிதி. என். டபிள்யு. பி. பாலசூரிய. (2011), 13-15 டிசம்பர் வரை "Li-Ion Battery Anode uses Nano sized Sri Lanka vein graphite to enhance battery capacity" எனும் தலைப்பில் இலங்கை விஞ்ஞானிகளின் சர்வதேச மன்றத்தில் ஓர் விளம்பரச் சுவரொட்டியை கையளித்தார்.

**சமர்ப்பிக்கப்பட்டவை:**

- கலாநிதி. என். டபிள்யு. பி. பாலசூரிய. (2011), "Investigation of Landslides in Environmental Impact Assessment" சர்வதேச ஆய்வரங்கு, இத்தாலி, 3-9 ஒக்டோபர்.

- கலாநிதி. என். டபிள்யு. பி. பாலசூரிய. (2011), "Enhancing Research Skills through Scientific Collaboration" சர்வதேச ஆய்வரங்கு, பேராதனைப்பல்கலைக்கழகம், 9-12 ஜனவரி.

- ஏ.கே. விக்ரம சூரிய. (2011), "Tsunami and its effect on coastal and marine ecosystems of Southern and Eastern coastal zones of Sri Lanka (poster)", நீரியல் உயிர்ச் சூழல் 2011றகான மாநாடு, வியன்னா/ஆஸ்த்திரியா,1-5 மே.

- ஏ.கே. விக்ரம சூரிய. (2011), "Application of spatial technology for planning and implementation of development activities in Eastern and Northern coasts of Sri Lanka", விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினூடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், 19-21 ஏப்ரல்.

- ஏ.கே. விக்ரம சூரிய. (2011), "Preliminary flood risk intensity map of Southern province of Sri Lanka", அனர்த்த குறைப்பு, தணிப்பு மற்றும் முகாமைத்துவம் போன்றவற்றிற்கான தேசியஆய்வரங்கு, அடிப்படைக்கல்விக்கான நிறுவனம், கண்டி. 25-26 பெப்ரவரி.

- ஏ.எம். றஸ்மி. (2011), "Surveillance of Chikungunya and its Impacts in the Sainthamaruthu MOH Division", தேசிய ஆய்வரங்கு.

- ஏ.எம். றஸ்மி. (2011), "Male Participation in Family Planning", தேசிய ஆய்வரங்கு.

- ஏ.எம். றஸ்மி. (2011), "A Study of Association between Diabetic and Job Stress", தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. பி. இளங்கோ. (2011), "Mackey Functors on Groupoids", தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. பி. இளங்கோ. (2011), "Global Forum of Sri Lanka on Scientist", தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. எம்.ஏசி.எம். றாபி. (2011), "Translation Keyboard Configuration with Tamil Unicode Character", தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. எம்.ஏசி.எம். றாபி. (2011), "Automatic Speech Recognition System for Tamil Language", தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. எம்.எச. ஹாறுான், எம்.ஐ. சௌத்ரி மற்றும் எச்.ஆர. டபிள்யு. தர்மரத்ன. (2011), "Urease inhibitory active compound from marine entophytic fungus *Aspergillus terreus",* விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினூடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கின் நடவடிக்கை, சுருக்கம், பக்கம் 134.

**கலை, கலாசார பீடம்**

**ஆய்வுப் பத்திரிகைகள்:**

**வெளியிடப்பட்டது:**

- கலாநிதி. எம்.ஏ. முஹம்மட் றமீஸ். (2011), "Literary Pursuit, in SHM. Jameel (eds), The Muslim Heritage of Eastern Sri Lanka", முஸ்லிம் மகளீர் ஆய்வுக்கும் நடவடிக்கைகளுக்குமான களம்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Translation Practices and Nation Development (A Critical Study Based on Sri Lanka)", விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினூடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Post War Development and the Contribution of Language: A view on Sri Lankan Environment' published for the International Symposium on" விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினுாடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- திருமதி. முஹம்மட் அப்துல் ஸலாம் பாத்திமா சாதியா. (2011), "The poems after the war- with special reference to Ampara District" விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினுாடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Translation and its Importance", ஆய்வுப் பத்திரிகை, கலம் (சஞ்சிகை) நான்காம் பகுதி, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- திருமதி. முஹம்மட் அப்துல் ஸலாம் பாத்திமா சாதியா. (2011), "Malaiyahach Siruvarhalin Nilai – Malaiyahak Kavithaihalai Adippadaiyahakkonda Aayvu" பண்பாடு சஞ்சிகை.

**சமர்ப்பிக்கப்பட்டவை:**

- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "நாவல்" , கொழும்பு தமிழ்ச்சங்கம், 6-9 ஜனவரி

- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "Rebuilding Deep Ethnic Coherence in the Post Conflict Situation – A Case Study", சுருக்கம், " விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினுாடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "Various Trends in Post – War Tourism and Development in the Eastern Province", பிராந்திய அபிவிருத்திக்கான தேசிய மாநாடு, கலை கலாசசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 10-11 டிசம்பர்.

- கலாநிதி. எம்.ஏ. முஹம்மட் றமீஸ். (2011), "Politics of Feminine Language: A Study based on Anar's Poetries", தேசிய மாநாடு, கலை கலாசசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 10-11 டிசம்பர்.

- கலாநிதி. எம்.ஏ. முஹம்மட் றமீஸ். (2011), "Muslims' Discourses in Post-war Sri Lanka: A Study based on Media News" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி. எம்.ஏ. முஹம்மட் றமீஸ். (2011), தேசிய மாநாட்டு சுருக்க நடவடிக்கைகள், கலை கலாசசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- சித்தி றாஹிலா உம்மா முஹம்மட் ஷியாட். (2011), "இலக்கணம் கற்பதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு", இலங்கையில் பிராந்திய அபிவிருத்திக்கான பணிப்பட்டறை, சமூக விஞ்ஞானங்கள் திணைக்களம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கணகசபை றகுபரன். (2011), "இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரவாறு", சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, 20-22 மே, கோலாலம்பூர், மலேசியா.

- கணகசபை நகுபரன். (2011), "இலங்கைத்தமிழ் இலக்கியங்களில் மஹாவலி கங்கை", பிராந்திய அபிவிருத்திக்கான பணிப்பட்டறை, சமூக விஞ்ஞானங்கள் திணைக்களம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கணகசபை நகுபரன். (2011), 'பிரித்தானியர் ஆட்ச்சிக்காலத்தில் சமய நிலை: சன்டையிலிருந்த சமரசத்திற்கு', பிரித்தானிய காலனித்தவமும் நவீனத்துவத்துவமும் எனும் தொனிப் பொருளிலான வரடாந்த ஆய்வுக் கருத்தரங்கு, இந்து மத சமய விவகாரங்களக்கான திணைக்களம், கொழும்பு.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Translation Practices and Nation Development (A Critical Study Based on Sri Lanka)" விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினூடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Post War Development and the Contribution of Language: A view on Sri Lankan Environment", விஞ்ஞானம், முகாமைத்தவம் தொழில் நுட்பம் போன்றவற்றினூடான யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திக்கான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு, சுருக்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 19-21 ஏப்ரல்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Peace and Social Harmony for the Regional Development: The Possibility through the Trilingual Studies in Sri Lanka" பிராந்திய – 2011ற்கான தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி. அப்துல் பரீட் முஹம்மட் அஸ்ரப். (2011), "Attempts for the Creation of Technical Terms Centre Around Translation: A view Based on the field of Information Technology" பிராந்திய – 2011ற்கான தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- திருமதி. முஹம்மட் அப்துல் ஸலாம் பாத்திமா சாதியா. (2011), "Dowry System and its Practice among Srilankan Muslims – with Special Reference to Ampara District" ஆசிய அரச குடும்பத்திற்கான வருடாந்த அமர்வு, கொழும்பு.

- திருமதி. றிசானா. (2011), "The Problem Faced by the Students in Learning Tamil Grammar – A Study Based on Palamunai Area" பிராந்திய – 2011ற்கான தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 10 – 11 டிசம்பர்.

- ஜெமீலா ஹனுான் உமர். (2011), "Regional Development" பிராந்திய – 2011ற்கான தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 10 – 11 டிசம்பர்.

- செல்வி. செல்வகுமாரி சிவலிங்கம். (2011),"காலனித்துவ இந்துசமய பாதுகாப்பு முயற்ச்சிகள்", பிராந்திய – 2011ற்கான தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 10 – 11 டிசம்பர்.

- செல்வி. பொளசுல் கரீமா. (2011), "English-Tamil Bilingualism in the Balangoda Municipality" தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- செல்வி. எம்.எச்.எப். சிம்லா. (2011), "The Role of Technology in Teaching English effectively" தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- திருமதி. தஸ்மினா அஷ்ரப். (2011), "Regional Development possibility through the Trilingual studies" தேசிய மாநாடு, கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**கட்டுரைகள்:**

**வெளியிடப்பட்டது:**

- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "Colebrook Cameroon Reforms" நித்திலம், சி.எஸ்.டி.ஐ. யின் வருடாந்த சஞ்சிகை, வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.
- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "The Idea of Progress in History" கலம், கலை கலாச்சார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "Political Participation of Women – A Review" சொல், பெண்மையின் புகழ், 1வது காலாண்டு, பெண்களும் ஊடகவலைப்பின்னலும், கொழும்பு.
- கணகசபை ரகுபரன். (2011), "ஐந்தவித்தான் யார்?", முப்பால் திருக்குறள் மாநாட்டு சிறப்பு மலர், தமிழ்ச்சங்கம், கொழும்பு.
- கணகசபை ரகுபரன். (2011), "சம்பந்தரின் திருக்கடைக்காப்புச் செய்யுள்கள்", சங்கத்தமிழ், இதழ் 4, தமிழ்ச்சங்கம், கொழும்பு.
- கணகசபை ரகுபரன். (2011), "நாவலரின் உதாரன ஆழகை", சங்கத்தமிழ், இதழ் 5, தமிழ்ச்சங்கம், கொழும்பு.
- கணகசபை ரகுபரன். (2011), "குமாரசுவாமி புலவர்: நவீன மயப்பாட்டின் பங்காளி" , பண்பாடு 20:1, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.
- கணகசபை ரகுபரன். (2011), "தென்னிந்திய இசையின் பொற்காலம்", தமிழின் நவயுகம் ஆய்வாராய்ச்சி சிறப்பு மலர், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.
- கணகசபை ரகுபரன். (2011), "அறநெறிக்கால இலக்கியங்களின் அழகியலில் அரசியல்", அறநெறிக்காலமும் தமிழகப்பண்பாட்டு மரபுகளும், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.
- கணகசபை ரகுபரன். (2011), "பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி", நித்திலம், வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.
- கணகசபை ரகுபரன். (2011), "இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு", சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் ஆய்வுச்சஞ்சிகை, மலேசியா.

**சமர்ப்பிக்கப்பட்டவை:**

- கலாநிதி. எஸ். அனுசியா. (2011), "Development of Historiography during British Period in India" கருத்தரங்கு, பிரித்தானிய காலனித்தவமும் நவீன மயப்படுத்தலும், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், 14-16 ஒக்டோபர், கொழும்பு.

## முகாமைத்துவ வர்த்தக பீடம்

### ஆய்வுப் பத்திரிகைகள்:

### வெளியிடப்பட்டது:

- ஆதம்பாவா ஜஹ்பர், சிஹாம். ஏ.எம். (2011), "A study on the Relationship between Corporate financial Performance and Corporate Social Responsibility" வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்திற்கான சர்வதேச சஞ்சிகை இதழ் 1(6)2011.

### சமர்ப்பிக்கப்பட்டவை:

- கலாநிதி. ஏ. ஜஹ்பர். (2011), "Effect of Multicollinearity in Unbiased Regression Model" தேசிய ஆய்வரங்கு.

- கலாநிதி. ஏ. ஜஹ்பர். (2011), "Analyzing the Performance Variation between Competitive and Non-Competitive Examinations among Grade 5 Students" தேசிய ஆய்வரங்கு.

- எஸ். ஆதம்பாவா. (2011), "Strategies Technology Adoption and its current state and implications on agri business for making sustainable development in Eastern Province of Sri Lanka" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எல்.எம்.ஏ. சமீம். (2011), "An assessment of the role of business entrepreneurs in conflict Transformation – A case study of South Eastern Sri Lanka" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எல்.எம்.ஏ. சமீம். (2011), "The role of Business community in the business environment: Through the lens of corporate social responsibility" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எல்.எம்.ஏ. சமீம். (2011), "A Global Climate Change: A business strategy perspective" சர்வதேச மாநாடு, அண்ணாமலை பல்கலைக்கழகம், இந்தியா, ஜூலை 28-30.

- ஏ.எல்.எம்.ஏ. சமீம். (2011), "The entrepreneurs' Sustainable Network Approach: A way to improve the multi ethnic business and Social Relation Ship in the post conflict context" சர்வதேச மாநாடு, முகாமைத்துவத்திற்கான சாய்ராம் கல்வி நிறுவனம், இந்தியா, செப்டம்பர் 22-23.

- இஸ்மாயில், எம்.பி.எம். (2011), "Problem Identification (PI) using Participatory Rural Approach (PRA): A special reference to Aalimsenai of Oluvil" வர்த்தகம், தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மாநாடு, பக்கம் 32.

- இஸ்மாயில், எம்.பி.எம். (2011), Risk Assessment (RA) in Transaction Processing System (TPS) : An approach of quantitative and qualitative risk Assessment of Hatton National Bank – HNB - in Ampara Coastal Belt Area (ACBA)" " வர்த்தகம், தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மாநாடு, பக்கம் 129.

- இஸ்மாயில், எம்.பி.எம். (2011), "Association between brand preferences of Market leader & Market Niche in weaving Industry of Maruthamunai" நிலையான அபிவிருத்திக்கான வர்த்தகம், தொழில்நுட்பம போன்றவற்றில் திறன் விருத்திக்கான சர்வதேச மாநாடு.

- ஏ.எம்.எம். முஸ்தபா. (2011), "Sri Lanka Tourism (SLT) A Forecast of Foreign Tourists (FFT) innovative Business & Technology Strategies for Developing countries" சர்வதேச மாநாடு, துபாய், டிசம்பர் 16-17.

- ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் எஸ். சிவராஜசிங்கம். (2011), "An Empirical Analysis of Stochastic Behavior of Sri Lankan Exchange Rate" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் எஸ். சிவராஜசிங்கம். (2011), "Dynamic Behavior of Red Onion Prices in Jaffna District" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் கே.ஏ.டபிள்யு.பி.வி. பெரேரா (2011), "Demand for State Lotteries in post War period. A case study from Ampara District in Sri Lanka" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- ஏ.எம்.எம். முஸ்தபப. (2011), "Impact of Foreign Direct Investment on Gross Domestic Product and Suggestion for Attraction of FDI after the War in Sri Lanka" சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- எம்.பி. முஹம்மட் இர்சாட். (2011), "An Analysis on the Consumers' Adoption of online Banking in Sri Lanka"

**நூல்கள்:**

- எஸ். குனபாலன். (2011), "Islamic Banking System in Sri Lanka: A paradigm of success" ISBN 978-93-80812-05-2

- எஸ். குனபாலன். (2011), "Banking Sector in the Global Scenario" வர்த்தகத் திணைக்களம், வியாபாரக் கல்விக்கான பாடசாலை, மன்னன்மனியம் சுந்தரநாரா பல்கலைக்கழகம், இந்தியா, சிறி மருதி வெளியீட்டாளர் - சென்னை -600049

**இஸ்லாமிய கற்கைகள் அறபுமொழி பீடம்**

**ஆய்வுப் பத்திரிகைகள்:**

**வெளியிடப்பட்டது:**

- எம்.எஸ்.எம். ஜலால்டீன். (2011), "Resettlements and recovery of livelihood of 2005 Tsunami victims of Ampara district with special reference to Maruthamunai village" வருடாந்த அய்வரங்கு, சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், 18-19 ஒகஸ்ட்.

- எம்.எஸ்எம். ஜலால்டீன். (2011), "Issues of Contemporary Sri Lanka Muslim Education with Special Reference to Apmarai District Muslim Education " சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

- எம்.எஸ்எம். ஜலால்டீன். (2011), "Islamic Revivalism in contemporary Sri Lanka with special reference to Amparai District " சர்வதேச ஆய்வரங்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஏப்ரல் 19–21.

## 09. நிகழ்ச்சிகள், செயலமர்வுகள் மற்றும் வேலைப்பட்டறைகளின் விபரங்கள்

| விடயம் | கலந்து கொண்டது | பூர்த்தி யானது | சமர்ப்பிக்க ப்பட்டது. |
|---|---|---|---|
| அ. பட்டப்பின்படிப்பு பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 16 | - | 07 |
| ஆ. பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | - | - | - |
| இ. பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 45 | - | 10 |
| ஈ. டிப்ளோமா நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 07 | - | - |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 05 | - | - |
| ஊ. ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **73** | **-** | **17** |

## 10. பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகளின் விபரம்:

| விடயம் | விருதுகள் எண்ணிக்கை | கல்வியாளர் | மாணவர் |
|---|---|---|---|
| அ. உள்ளூர் விருதுகள் | 01 | - | - |
| ஆ.தேசிய விருதுகள் | 08 | 01 | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **09** | **01** | - |

## 11. ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் தொடர்பான விபரம்:

| பீடம் | கற்கை நெறி | மோழி மூலம் | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | எம். பில் | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொருத்தமாற்றது | | | | | | | | |

## 12. மீண்டெழும் செலவினம் தொடர்பான விபரம் :

| விடயம் | 2010 ரூபா | 2011ா |
|---|---|---|
| அ. ஆளணி ஊதியங்கள் | 165789977.41 | 207447319.00 |
| ஆ. போக்குவரத்து | 1248610.88 | 1988772.00 |
| இ. வழங்கல்கள் | 14492336.37 | 20806987.00 |
| ஈ. பராமரிப்பு | 10127434.74 | 23306967.00 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 46538301.25 | 48851790.00 |
| ஊ. ஏனையவை | 9916699.15 | 10482994.00 |
| மொத்தம் | **247213359.80** | **312884829.00** |

## 13. மூலதனச் செலவினம் தொடர்பான விபரம் :

| விடயம் | 2010 ரூபா | 2011ர |
|---|---|---|
| அ.தளடபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு | 10495826.00 | 15096000.00 |
| ஆ. இயந்திரங்களின் கொள்வனவு | 5962000.00 | 5464000.00 |
| இ. கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்களின் உருவாக்கம் | 7491293.00 | 14490000.00 |
| ஈ. ஏனையவை (புத்தகங்கள்) | 1976150.00 | 3550000.00 |
| உ. தொடர்பாடல் | 4592870.00 | 15000.00 |
| மொத்தம் | **30518139.00** | **38615000.00** |

## 14. (அ) செயற்றிட்டங்களின் விபரம் (உள்நாட்டு நிதியிடலில்):

| பெயரும் விபரங்களும் | கடன் / மானியம் | நிதி முகவர் | TCE ரூபா மில் | RFA ரூபா மில் | DF ரூபா மில் |
|---|---|---|---|---|---|
| கலை கலாசாரப்பீட கட்டடத்தொகுதி | | | 137.00 | - | - |
| முகாமைத்துவ வணிக பீட கட்டடத்தொகுதி | | | 160.00 | - | - |
| நூலக கட்டடத்தொகுதி | | | 200.00 | - | - |
| பிரயோக விஞ்ஞான பீட கட்டடத்தொகுதி | | | 170.00 | - | - |
| பிரயோக விஞ்ஞான பீட விடுதிக் கட்டடத்தொகுதி | | | 149.00 | - | - |
| மொத்தம் | | | **816.00** | - | - |

## (ஆ) செயற்றிட்டங்களின் விபரம் (வெளிநாட்டு நிதியிடலில்):

| பெயரும் விபரங்களும் | கடன் / மானியம் | நிதி முகவர் | TCE ரூபா மில் | RFA ரூபா மில் | DF ரூபா மில் |
|---|---|---|---|---|---|
| மாணவர் விடுதிக் கட்டடத்தொகுதி | கடன் | குவைத் அரச நிதி பொருளாதார அபிவிருத்தி | 315.00 | 283.50 | 31.50 |
| ஆலுவலகர் விடுதிக் கட்டடத்தொகுதி | | | 160.00 | 144.00 | 16.00 |
| மாணவர் நிலையக் கட்டடத்தொகுதி | | | 60.00 | 54.00 | 6.00 |
| இஸ்லாமிய அறபு மொழிகள் பீட கட்டடத்தொகுதி | | | 140.00 | 126.00 | 14.00 |
| விளையாட்டு மைதாணமும் அரங்கம் | | | 55.00 | 49.50 | 5.50 |
| தகவல் தொழிநுட்ப பீட கட்டடம் | | | 130.00 | 117.00 | 13.00 |
| சுகாதார நிலைய கட்டடம் | | | 24.00 | 21.60 | 2.40 |
| மொத்தம் | | | **884.00** | **795.60** | **88.40** |

## 15. (அ) செயற்றிட்டங்களுக்கான செலவீடுகளின் விபரம் (உள்நாட்டு நிதியிடலில் - மில்லியன்):

| பெயர் | TCE ரூபா மில் | 2010 இல் செலவீடு ரூபா மில் | 2011 இல் ரூபா மில் | 31.12.2011 இல் உள்ள வாறு திரண்ட செலவு | % பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| கலை கலாசாரப்பீட கட்டடத்தொகுதி | 137.00 | 4.75 | 2.28 | 131.66 | 100 |
| முகாமைத்துவ வணிக பீட கட்டடத்தொகுதி | 160.00 | 40.47 | 36.48 | 76.95 | 64 |
| நூலக கட்டடத்தொகுதி | 200.00 | 54.42 | 50.02 | 104.44 | 70 |
| பிரயோக விஞ்ஞான பீட கட்டடத்தொகுதி | 170.00 | 2.90 | 10.96 | 13.86 | ஒப்பந்ததார் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளார் |
| பிரயோக விஞ்ஞான பீட விடுதிக் கட்டடத்தொகுதி | 149.00 | - | 21.53 | 21.53 | ஒப்பந்ததார் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளார |
| மொத்தம் | **816.00** | **102.54** | **121.27** | **348.44** | |

## (ஆ) செயற்றிட்டங்களுக்கான செலவீடுகளின் விபரம் (வெளிநாட்டு நிதியிடலில் - மில்லியன்):

| பெயர் | TCE ரூபா மில் | 2010 இல் செலவீடு ரூபா மில் | 2011 இல் ரூபா மில் | 31.12.2010 இல் உள்ள வாறு திரண்ட செலவு | % பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| மாணவர் விடுதிக் கட்டடத்தொகுதி | 315.00 | 154.97 | 17.73 | 304.82 | 100 |
| அலுவலகர் விடுதிக் கட்டடத்தொகுதி | 160.00 | 73.64 | 1.62 | 146.02 | 100 |
| மாணவர் நிலையக் கட்டடத்தொகுதி | 60.00 | 20.70 | 10.92 | 37.00 | 100 |
| இஸ்லாமிய அறபு மொழிகள் பீட கட்டடத்தொகுதி | 140.00 | 45.69 | 65.75 | 122.42 | 100 |
| விளையாட்டு மைதானமும் அரங்கம் | 55.00 | 24.95 | 18.98 | 43.93 | 100 |
| தகவல் தொழிநுட்ப பீட கட்டடம் | 130.00 | 37.64 | 50.49 | 98.68 | 100 |
| சுகாதார நிலைய கட்டடம் | 24.00 | 11.87 | 9.39 | 21.26 | 100 |
| மொத்தம் | **884.00** | **369.46** | **174.88** | **774.13** | |

## 16. நிதி முன்னேற்ற விபரம் (செலவீடு)

| விடயம் | 2010 இல் ஒதுக்கீடு | 2011 இல் செலவீடு | சேமிப்பு / பற்றாக்குறை ரூபா |
|---|---|---|---|
| அ. செயற்றிட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவினம் | 315162000.00 | 312884829.00 | 2277171.00 |
| ஆ. செயற்றிட்டம் தவிர்ந்த மூலதனச் செலவினம் | - | - | - |
| இ. செயற்றிட்டம் - உள்நாட்டு நிதி | 126500000.00 | 126400000.00 | 100000.00 |
| ஈ. செயற்றிட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| மொத்தம் | **441662000.00** | **439284829.00** | **2377171.00** |

## 17. நிதி முன்னேற்ற விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்)

| விடயம் | 2010 இல் ஒதுக்கீடு | 2011 இல் சேகரிப்பு | சேமிப்பு / பற்றாக்குறை ரூபா |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்பு கற்கைகள் | 215000.00 | 230000.00 | (15000) |
| ஆ. பட்டப்பின்படிப்பு கற்கைகள் | - | - | - |
| இ. ஆலோசனைகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | 7762000.00 | 8942000.00 | (1180000) |
| மொத்தம் | **7977000.00** | **9172000.00** | **(1195000)** |

## 18. நிதி செயற்பாட்டு ஆய்வு – 2011

| விடயம் | சூத்திரம் | தலா மாணவருக்கான செலவீடு ரூபா |
|---|---|---|
| அ. தலா மாணவருக்கான மீண்டெழும் செலவீடு | மீசெ/மாணவர் தொகை | **180962.88** |
| ஆ.தலா மாணவருக்கான மூலதனச் செலவீடு | மூசெ/ மாணவர் தொகை | **22333.72** |
| மொத்தம் | | **2032966.00** |

## 19. கிடைக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம் :

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவீடு ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| முகாமைத்துவ வர்த்தக பீடம் | | நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது |
| நூலகம் | | |
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | | |
| பிரிவிடல் வேலையும் குளிரூட்டி பொருத்துதலும் | | நிறைவடைந்து விட்டடது |
| கலாசார நூதனசாலை அமைத்தல் | | |
| சுற்றுமதில் | | |

## 20. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஈஎன்/ஏஎம்/ஏ/எஸ்ஈயூஎஸ்எல்/எவ்எஸ்/2011 2012 நவம்பர் 09

உபவேந்தர்,
இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

**இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புக்கள் உள்ளடங்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின்படி பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2012 யூன் 08 இல் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

---

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தென் கிழக்குப் பல்கழைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

2.2.1 **கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,416,921,565 கூட்டுமொத்தத் தொகையான ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி பதிவேட்டுப் பெறுமதியை அடிப்படையாக கொண்டிருந்தது.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 22,716 தொகையான ஞாபகார்த்த நிதிகள் மீதான வட்டி செயற்பாட்டு வருமானமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 334,128 தொகையான வாகனங்களின் திருத்தங்கள் மீண்டெழும் செலவினத்திற்குப் பதிலாக தவறாக மூலதனச் செலவினமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

2.2.2 **பெறவேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **நிலுவையாகவிருக்கின்ற உத்தியொகத்தர் கடன்கள்**

(i) ரூபா 321,955 தொகையான இடர் கடன்கள் நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இடர் கடனுக்கு மேலதிகமாக வாகனக் கடனாக உத்தியோகத்தர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 41,962 ஆன தொகை 15 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) இடர் கடனுக்கு மேலதிகமாக கணனிக் கடனாக உத்தியோகத்தர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 9,000 ஆன தொகை 09 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **தீர்க்கப்படாத முற்பணங்கள்**

புத்தகக் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 81,488 தொகையான முற்பணங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாது இருந்தன.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) **பொதுநிர்வாகச் சுற்றறிக்கைகள்** | |
| (i) 1991 ஒத்தோபர் 4 ஆந் திகதிய 45/91 ஆம் இலக்கம் மற்றும் 2010 யூன் 7 அந்திகதிய 9/2010 ஆம் இலக்கம் | அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கும் இடையில் பிரயாணம் செய்வதற்கு பயன்படுத்திய தனியார் கார்களிற்காக சபை உறுப்பினர்களிற்கு ரூபா 107,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) 1990 ஒத்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட இருபது வாகனங்களில் ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தின் 9.4 ஆம் பிரிவு | மோட்டார் வாகனங்களிற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 10 ஆந் திகதிய பீஈ/1/174/11(ஆ) ஆம் இலக்க கடிதம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறாமல் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 282,567 தொகையான மொழிப்படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | 9 வருகைதரும் விரிவுரையாளர்கள் அவர்களிற்குரிய திணைக்களங்களிடம் இருந்து அங்கீகாரம் பெறாமல் விரிவுரைகளை வழங்கியிருந்தனர். |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1997 நவம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க சுற்றறிக்கை | இரண்டு தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக சிரேஸ்ட விரிவுரையார் தரம் II ஆக பதவி உயர்தப்பட்டிருந்தனர் |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னர் உள்ள ரூபா 398,504,487 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 368,771,300 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட ரூபா 341,832,350 தொகை ரூபா 56,672,137 ஆக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையை குறைத்திருந்ததை முன்னைய ஆணடடிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 276,563,463 ஆன அசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் அந்த ஆண்டிற்கான ரூபா 92,207,837 பற்றாக்குறையை ஒப்பிடலாம். ரூபா 35,535,700 ஆல் பற்றாக்குறையில் குறைவைக் காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் சில் கல்விசார் நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| நடாத்தப்பட்ட பட்டப் பாடநெறிகள் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2011 | 2010 | 2011 | 2010 |
| பிரயோக விஞ்ஞானம் | 184 | 95 | 15 | 44 |
| கலையும் கலாசாரமும் | 118 | 165 | 02 | 235 |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | 274 | 238 | 01 | 55 |
| இஸ்லாமியமும் அரபும் | 243 | 164 | 04 | 66 |
| மொத்தம் | 819 | 662 | 22 | 400 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர்களில் 22 சதவீம் மற்றும் 30 சதவீத மாணவர்கள் முறையெ பிரயோக விஞ்ஞான பீடத்திற்கும் இஸ்லாமியம் மற்றும் அரபு பீடத்திற்கும் பதிவு செய்யப்பெற்றிருந்தனர். இதன்படி, மீளாய்வாண்டின் போது அந்த பீடங்களிற்கான மாணவர்களின் பதிவு முனைனைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 94 சதவீதம் மற்றும் 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கலையும் கலாச்சார பீடம் மற்றும் முகாமைத்துவமும் வர்த்தகமும் பீடத்திற்கான மாணவர் பதிவு முறையே 10.5 சதவீதம் மற்றும் 2.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பட்டம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 95 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4.2 மஹாபொலவும் உதவிப்பணமும்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது 603 மாணவர்களிற்கு செலுத்தப்பட்ட மஹாபொல புலமைப்பரிசில் ரூபா 9,936,350 ஆகும்.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது 1067 மாணவர்களிற்கு செலுத்தப்பட்ட உதவிப்பணங்கள் ரூபா 15,734,000 ஆகும்.

## 4.3 ஏனைய நடவடிக்கைகள்

----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 85 ஆக இருந்த அதேநெரம் விரிவுரையாளர் ஒருவரிற்கான சாரசரி மாணவர் 20 ஆக இருந்தது.

(ஆ) பெறுமானத்தேய்வில்லாமல் மொத்தச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 338,555,180 ஆக இருந்ததுடன் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1726 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது ஒரு மாணவனிற்கான கிரயம் ரூபா 196,150 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ஒரு மாணவனிற்கான கிரயம் ரூபா 186,275 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 584 ஆண் மாணவர்களிற்கும் 993 பெண் மாணவிகளிற்கும் விடுதி தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டடிருந்தன. மீளாய்வாண்டிற்காக ஏற்பட்ட மொத்த விடுதிச் செலவினம் ரூபா 4,118,386 ஆக இருந்தது.

**4.4 அங்கீகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறாமல் வதிவிடத்திற்கும் அலுவலகத்திற்கும் பிரயாணம் செய்வதற்காக சொந்த வாகனங்களைப் பயன்படுத்தியதற்காக பல்கலைக்கழகத்தின் 4 பீடாதிபதிகளிற்கு ரூபா 42,532 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறாமல் வெகுமானமாக உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 324,890 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

--------------------------------------------

ரூபா 102,798 பெறுமதியான ஆறு நுகர் பொருள் விடங்கள் 8 ஆண்டுகளிற்கு மேலாக பயன்பாடின்றி இருந்தன.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக 9 வாகனங்கள் இருந்த போதிலும் வாடகைக் கட்டணங்களாக ரூபா 426,347 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.7 செயற்திட்டத்திலுள்ள தாமதங்கள்**

---

பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ஆலோசனை சேவையாக ரூபா 16,866,550 ஆன தொகை செலுத்தப்பட்டிரந்தது. எவ்வாறாயினும், அத்தகைய பிரதான திட்டம் 2012 ஆகஸ்ட் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 பொருட்கள் சேவைகளின் கொள்வனவு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 5.4.13 ஆம் பிரிவின்படி பொருட்கள் வழங்குதற்காக கைசாத்திட்ட உடன்படிக்கையில் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கான ஏற்பாடு உள்ளடக்கபட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கல்கள் குழுவின் அங்கீகாரம் பெறாமலும் கொள்வனவு செய்யும் தேவையும் குறிப்பு (பீஆர்என்) இல்லாமலும் ரூபா 2,544,358 பெறுமதியுடைய சபா மண்டப அறை மேசை மற்றும் வரவேற்பு கருமபீடம் என்பன கொள்வனவு செய்யப்ப்டிரந்தது. மேற்குறித்த விடயங்களின் வழங்கல்களிற்காக மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட 17 வழங்குனர்கள் இருந்தபோதிலும் அவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டிருக்கவில்லை. மேலும், கேள்வி நிபந்தனைகளிற்கு முரணாக முற்பணமாக ரூபா 1,844,573 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 753(2) இல் குறிப்பிட்டபடி பொருள் பெறப்பட்ட குறிப்புகள் (ஜீஆர்என்) வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்**

---

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கு பல்கலைக்கழகத்திற்கான வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்டிருந்த கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் அதலுள்ள அக்கறை மோதலை கருத்திற் கொள்ளாமல் 2010 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்தின் ஆட்சிச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மீளாய்வாண்டின் பொது ரூபா 3,352,234 கூட்டுமொத்தத் தொகையான கொள்வனவுகள் அந்தக் கம்பனியிடமிருந்து செய்யப்பட்டிருந்தன.

## 5. கணக்களித்தகைமை மற்றும் நல்ல ஆளுகை

-----------------------------------------------------------------

### 5.1 கூட்டுத்திட்டம்

--------------------------

2006 – 2015 காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2012 ஒக்தோபர் 31 வரை சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

-----------------------------------------------

2010 ஆம் ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2012 ஆகஸ்ட் 31 வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

பாதீடிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) முற்பணக் கொடுப்பனவுகள்
(ஈ) நூலக நிர்வாகம்
(உ) பிணைமுறிகள் மற்றும் உடன்படிக்கைகளை மீறல்
(ஊ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

ஒப்பம்:- எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**21. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்**

எஸ்ஈயூ/வீசீ/பீ/ஏஜீ/2011

உமது இல. என்ஈ/ஏஎம்/பீ/எஸ்ஈயூஎஸ்எல்/எவ்ஏ/2011

2013 ஜனவரி 03

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

கொழும்பு.

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (2) (2) ஆம் பிரிவின்படியானதும் 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) ஆம் பிரிவின்படியானதுமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

2012 நவம்பர் 9 ஆந்திகதியதும் 2012 டிசம்பர் 4ம் திகதி நாங்கள் பெற்றுக்கொண்டதுமான மேற்குறித்த உங்களுடைய அறிக்கைக்கு நாங்கள் குறிப்பிடுபவையும் எங்களுடைய அவதானிப்பகளும் கீழே தரப்படுகின்றது.

**2. <u>நிதிக்கூற்று</u>**

**2.1. தரமான அபிப்பிராயம்.**

**2.2 நிதிக் கூற்று மீதான கருத்துரைகள்**

**2.2.1 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>**

இதனைச் சரிப்படுத்தவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சொத்துக்களுக்கான பௌளதீகரீதியான இருப்புச் சரிபார்ப்பு மேற்கொள்ளப் படுகின்றது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------

(அ) அடையாளங் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரிப்படுத்தப்படும்.

JX - 3377 இலக்க வாகனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பாரிய திருத்தமாக இது இருக்கின்றமையினால் இச்செலவானது மூலதனச் செலவின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

**அ) <u>செலுத்தப்படாத கடன்கள்</u>**

i)

| **பெயர்** | **தொகை** | **நிலமை** |
|---|---|---|
| எம்.எம்.எம். றபீக் | 56,765 | இவர்கள் சேவையில் இல்லை. |
| எஸ்.றி. ஆரிப் | 207,300 | பல்கலைக்கழகம் அவர்களது சேமலாப |
| ஏ.ஆர்.எம். இம்தியாஸ் | 29,058 | நிதியிலிருந்து மீளப்பெறுவதற்குரிய ஆரம்ப |
| | | நடவடிக்கைகளை எடுத்துள்ளது. |
| எஸ்.எச். அமீர் | 28,832 | 2012 டிசம்பர் மாதத்தில் மீளப் பெறப்பட்டது. |

ii) 2012 டிசம்பர் மாதத்தில் மீளப் பெறப்பட்டது.

iii) தற்போது சேவையில் இல்லாத எம்.எம்.எம். றபீக் என்பவரால் செலுத்தப்படாத கடனை அவருடைய சேமலாப நிதியிலிருந்து மீளப்பெறுவதற்கா அவரிடமிருந்து சம்மதக் கடிதம் பெறப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ) <u>செலுத்தப்படாத முற்பணங்கள்</u>**

பருவ வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகளைப் பெறுவதற்காக முற்பணக் கொடுப்பணவுகளை மீளடைப்பதற்கு 12 மாதகாலங்கள் தேவைப்படுகின்றது. ஏனெனில் நூலகமானது ஆண்டுக்கான இடுவுகளுக்காக எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது. இதற்கப்பாலான தேவைகளுக்காக் பயன்படுத்தப்பட்ட முற்பணங்களை மீளப் பெற்றுக் கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

**(அ) பொது நிருவாக சுற்றுநிரூபம்**

i) **45/91 & 9/2010** பொ.நி. சுற்றுநிரூப இல. 45/91 தற்போது முற்றாக செயற்படுத்தப்படுகிறது.

ii) சுற்றுநிரூபம் 45/91: அனைத்து வாகனங்களுக்குமான எரிபொருள் பாவனை சோதனை தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

**(ஆ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான தாபணவிதிக்கோவை**

பிரிவு 9.4 அத்தியாயம்-XXIIV: மோட்டார் வாகணங்களுக்கான பதிவுப்புத்தகம் பேணப்படுகின்றது.

**(இ) பொதுத்துறை வணிக நிறுவவணங்களுக்கான பொதுப் பணிப்பாளரின் கடித இல. பிஇ/1/174/11(பி)**

கொடுப்பணவுகள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் இந்த படிக்காசு 01.01.2003 ஆம் திகதியோ அல்லது அதற்குப்பின்னரோ உள்வாங்கப்பட்டவர்களுக்கு செலுத்தப்படுவதில்லை.

**(ஈ) இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக் கோவை பிரிவு 1.4 அத்தியாயம் XXX**

பகுதி நேர விரிவுரையாளர்களின் நியமனம் தொடர்பாக அவர்களுடைய தினைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெறப்படல்வேண்டும் என்பது அவர்களது நியமனக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொடுப்பணவுகள் பல்பலைக்கழக ஆளும் அதிகாரசபையின் அனுமதியுடன் வழங்கப்படும்.

**(உ) 1997.11.21 திகதியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றுநிருப இல. 721**

பொது நிறுவணங்களுக்கான செயற்குழுவின் (கோப்) பரிந்துரைக்கமைவாக நாங்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையை நாடியுள்ளோம்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

கவனத்திற்கொள்ளப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாடுகள்

**(அ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

**(ஆ)** கவனத்திற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் மாணவர்களின் எண்ணிக்கைபல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவால் ஒதுக்கீடுசெய்யப்படுகின்றது.

**(இ)** இப்பகுதியில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட வெள்ள அனுபவத்தின் காரனமாக பரீட்சை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும் மீள் பரீட்சைக்குத்தோற்றிய 22 மாணவர்களினதும் பரீட்சை பெறுபேறுகள் கிரமமாக வெளியிடப்பட்டது.

**4.2** **(அ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

**(ஆ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

**4.3** **(அ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

**(ஆ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

**(இ)** கவனத்திற்கொள்ளப்பட்டது.

### 4.4 அங்கீகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**(அ)** தற்போது இது சரிசெய்யப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகம் போக்குவரத்து வசதி வழங்குகின்றது.

**(ஆ)** தற்போது இது சரிசெய்யப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------

பாாவிக்க முடியாத பொருட்களை அப்புறப்படுத்தவதற்கும் சீர்செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிக் குழுவிற்கும், பேரவைக்கும் கணக்காய்வாளர் குழுவின் 8ஆவது கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

உபவேந்தருக்கு ஒர் வாகனம் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதியில் இரண்டு பிக்அப்கள் 17 வருடங்கள் பழமையானவையும் சிக்கனமற்றதும் நீண்டதூரப்பாவனைக்கு நம்பகமற்றதுமாகும். அதனால் அவசியம் ஏற்படும் போது பல்கலைக்கழகம் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துகின்றது.

## 4.7 செயற்திட்டத்திலுள்ள தாமதங்கள்

---------------------------------------------------

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு ஆலோசகராக "ARUP" நிறுவனத்தினை அமர்த்துவதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு தயாராகியது. பெருந்திட்டத்தினை உருவாக்கவதற்கு "ARUP" நிறுவனம் நியமிக்கப்பட்டது. பூர்வாங்க பெருந்திட்டம் பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவின் உடன்பாட்டுடன் பூர்வாங்க பெருந்திட்டத்தின் மீளாய்வுக்கும் புதுப்பித்தலுக்கும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உள்ள "யுனி கன்சல்டன்சி" எனும் நிறுவனத்திற்கு இது தற்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்ஒப்படைப்பு தற்பொழுது முடியும் தறுவாயில் உள்ளது.

## 4.8 பொருட்கள் சேவைகளின் கொள்வனவு

---------------------------------------------------

### கொள்வனவு முறையிலுள்ள குறைபாடுகள்

(அ) எதிர்கால உடன்பாட்டிற்காக கவனித்திற்கொள்ளப்பட்டது.

(ஆ) தற்பொழுதுள்ள தளபாடங்கள் புதிய ஒர் கூட்ட மண்டபத்திற்கு மாற்றப்பட இருந்ததனால் உப வேந்தர் அலுவலகம் கூட்ட மண்டபத்திற்கான தளபாடங்களை கேட்டுக் கொண்டது. இப்பகுதியில் உள்ள விணியோகத்தர்களிடம் இருந்து கூறும் விலைகள் பெறப்பட்டு ஒரு தொகுதி தளபாடங்களும் பெறப்பட்டு பகுதியளவிலான தளபாடங்கள் பெறப்பட்ட பின்னர் பகுதியளவிலான கொடுப்பனவாக ரூபா 1,844,573 செலுத்தப்பட்டுள்ளது.

## 4.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

---

2011 ஜூன் 07ம் திகதி பொது நிறுவணங்களுக்கான செயற்குழுவினால் (கோப்) மேற்கொள்ளப்பட்ட பல்லைக்கழகத்தின் செயற்பாட்டு மீளாய்வின்போது இவ்விடயம் தொடர்பாக கேட்கப்பட்டது. இப்போது குறித்த கம்பனியானது பல்கலைக்கழகத்திற்கான விணியோகத்தரல்லாதிருப்பதுடன் குறித்தநபரும் பேரவை உறுப்பினராகவும் இல்லை.

## 5.1 கூட்டுத்திட்டம்

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 'யுனி ஆலோசனைக்குழுவின்' உதவியுடன் 2012 – 2016 காலத்திற்காக புதியவோர் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது கணக்காய்விற்காக கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

## 5.2 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

---

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

விரிவான செலவு விபரங்களில் குறைந்தளவான பாதகமான வேறுபாடுகள் காணப்படினும் பொதுவாக சம்பளம், வழங்கல்கள், பராமரிப்பு, ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய மீன்டெழும் செலவினங்கள் போண்றவற்றில் சாதகமான வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

(அ) கவனித்திற்கொள்ளப்பட்டது.

(ஆ) சொத்துக்களுக்கான பௌதீக இருப்புச் சரிபார்த்தல் முன்னெடுக்கப்படுகின்றது.

(இ) முற்பணக் கொடுப்பனவுகள் வழங்குவதில் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

(ஈ) கவனித்திற்கொள்ளப்பட்டது, சரிப்படுத்தப்படும்

(உ) இவ் விரிவுரையாளர்களில் ஒருவர் அவரது ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள முழுத்தொகையையும் அவரது சேமலாபநிதியிலிருந்து மீளப்பெற சம்மதக்கடிதத்தை வழங்கியுள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த விரிவுரையாளரும் ஒப்பந்தத்தில் உள்ள தொகையின் பகுதியளவான மீளச்செலுத்தலாக தனது சேமலாபநிதியின் மொத்தத்தையும் கழிப்பதற்கு சம்மதத்தை வழங்கியுள்ளனர். நாங்கள் பிணையாளர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகின்றோம்.

(ஊ) கவனித்திற்கொள்ளப்பட்டது.

ஒப்பம்: கலாநிதி முகமட் இஸ்மைல்

துணைவேந்தர்

பிரதிகள்: செயலாளர், உயர் கல்வி அமைச்சு.

செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு.

தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு